விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378


# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 214 வள்ளுவர் ஆண்டு 2053 ஆனி 05 வியாழக்கிழமை (21.07.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=
மட்டுமே

# ஜனாதிபதியாக ரணில் தெரிவு

## 54 மேலதிக வாக்குகளால் வெற்றி பெற்றார்



(கொழும்பு)

**இலங்கையின் 8ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க தெரிவு செய்யப்பட்டுள்ளார்.**

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற இரகசிய வாக்கெடுப்பில், 52 மேலதிக வாக்குகளால் வெற்றி பெற்று புதிய ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவாக 134 வாக்குகள் அளிக்கப்பட்டுள்ளன.

மற்றைய வேட்பாளர்களான டலஸ் அழகப்பெரும 82 வாக்குகளையும் அனுரகுமார திசாநாயக்க 03 வாக்கு 02

பிரிந்ததுபோதும்

# ஒன்றிணைந்து செயற்படுவோம்

ரணில் அழைப்பு 03

# கூட்டமைப்பின் ஐவர் ரணிலுக்கு வாக்கு

ஹரின் பெர்னாண்டோ

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் குறைந்தது 5 வாக்குகள் ரணில் விக் 15

கொழும்புத்துறையில்

# ஹெரோயின் எடுத்த இளைஞன் மரணம்

(யாழ்ப்பாணம்)

ஹெரோயின் போதைப்பொருளை ஊசிமூலம் எடுத்துக்கொண்ட 20 வயது இளைஞன் உயிரிழந்துள்ளார். 15

கொடிகாமத்தில்

# முதியவர் சடலமாக மீட்பு

(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட் 15

# இலங்கையுடனான பேச்சுக்களை விரைந்து முடிவுறுத்த முடியும்

## சர்வதேச நாணய நிதியம் தெரிவிப்பு

(டோக்கியோ)

இலங்கையுடனான நிதி மீட்புப் பேச்சுக்களை முடிந்த வரை விரைவாக முடிக்க முடியும் என்று சர்வதேச நாணய நிதியம் நம்பிக்கை கொண்டிருப்பதாக நிதியத்தின் நிர்வாகப் பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவா தெரிவித்துள்ளார்.

நெருக்கடியால் பாதிக்கப்பட்ட இலங்கையில் புதிய ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்கவை தெரிவு செய்வதற்கு சில மணி 15

இது தோல்வியல்ல

# வழிகாட்டல்

டலஸ் அழகப்பெரும

(கொழும்பு)

ஜனாதிபதியை தெரிவு செய்வதற்காக பாராளுமன்றத்தில் இடம்பெற்ற தேர்தலில் ஏற்பட்ட தோல்வியை தோல்வியென்றல்லாமல் தைரிய 15

# யாழில் இன்று முதல் எரிபொருள் விநியோகம்



யாழ்.அரச அதிபர்

(யாழ்ப்பாணம்)

தேசிய எரிபொருள் விநியோகத் திட்டத்துக்கமைய யாழ்ப்பாணத்தில் இன்று முதல் எரிபொருள் விநியோகிக்க நடவடிக்கை 15

# புதிய அரசு எடுக்கும் எந்த தீர்மானத்துக்கும் உடன்படுவேன்



## மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

புதிய அரசாங்கம் எடுக்கும் எந்த தீர்மானத்துக்கும் உடன்படுவேன் என முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

எந்த அரசாங்கம் வந்தாலும் அது நாட்டு மக்களுக்கு சேவை 15

# மக்கள் கருத்தை செவிசாய்க்காவிடின் கோட்டாவுக்கு நேர்ந்த கதியே ஏற்படும்

## சபையில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)

69 இலட்சத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெற்று ஆட்சிக்கு வந்த முன்னாள் ஜனாதிபதி மக்களின் கருத்துக்கு செவிசாய்க்காத காரணத்தினாலேயே பதவியை விட்டு விலக நேரிட்டது என்பதை பாராளுமன்றத்தில் உள்ள அனைவரும் நன்கு புரிந்து கொள்ள வேண்டும் எனவும் அவ்வாறு இல்லாவிடின் முன்னாள் ஜனாதிபதிக்கு நேர்ந்த கதியே ஏற்படும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார். 02

# மக்கள் எதிர்பார்ப்பை சபை நிறைவேற்றவில்லை



ஜே.வி.பி தலைவர் அநுர

(கொழும்பு)

"நாட்டு மக்களின் எதிர்பார்ப்பை பாராளுமன்றம் நிறைவேற்றவில்லை. அதனை இந்த பாராளுமன்றம் நிறைவேற்றும் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கவும் இல்லை." 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதியாக...

களையும் பெற்றுள்ளனர்.

223 பேர் வாக்களித்திருந்த நிலையில், அவற்றில் 04 வாக்குகள் நிராகரிக்கப்பட்டவையாக அறிவிக்கப்பட்டது.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் செல்வராசா கஜேந்திரன் ஆகிய இருவரும் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை.

கோட்டாபய ராஜபக்ஷவின் இராஜினாமாவைத் தொடர்ந்து வெற்றிடமாகியிருந்த ஜனாதிபதி பதவிக்காக ரணில் விக்கிரமசிங்க, டலஸ் அழகப்பெரும மற்றும் அநுரகுமார திசாநாயக்க ஆகியோர் போட்டியிட்டனர்.

1981ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்கான விசேட ஏற்பாடுகள் கட்டளைச் சட்டத்திற்கு அமைய, பாராளுமன்றத்தில் நேற்று வாக்கெடுப்பு நடத்தப்பட்டிருந்தது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை அறிமுகப்படுத்தப்பட்டதன் பின்னர், புதிய ஜனாதிபதி ஒருவர் பாராளுமன்ற உறுப்பினர்களின் வாக்குகளின் மூலம் தெரிவுசெய்யப்படும் முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

இதற்கு முன்னர் 1993ஆம் ஆண்டு ரணசிங்க பிரேமதாச கொலை செய்யப்பட்ட போது, வெற்றிடமாகிய ஜனாதிபதி பதவிக்காக அப்போதைய பிரதமராகவிருந்த D.B.விஜேதுங்க, பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரின் ஒருமித்த இணக்கப்பாட்டுடன் ஜனாதிபதியாக தெரிவானார். (ம-7)

## மக்கள் எதிர்பார்...

இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

இலங்கையின் 8 ஆவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பு பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்றது.

தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்ட பின்னர், தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்கள் மூவரும் கருத்துகளை முன்வைத்தனர். அவ்வேளையிலேயே அநுரகுமார திஸாநாயக்க மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

நான் வேட்பாளராகப் போட்டியிட்டேன். 3 வாக்குகள்தான் கிடைக்கும் என்பது எனக்குத் தெரியும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி, சுயாதீன அணிகள் என்பன டலஸுக்கு ஆதரவு வழங்கப்போவதாக அறிவித்தன. எனினும், கொள்கை காப்பாற்றப்படவில்லை.

18 ஆவது திருத்தச் சட்டமூலம், 52 நாட்கள் அரசியல் சூழ்ச்சி மற்றும் 20 ஆவது திருத்தச் சட்டமூலம் ஆகியவற்றின்போது எம்.பிக்கள் விலைபோனார்கள். தற்போதும் அது நடந்துள்ளது. இந்தக் கருத்தைச் சொல்வதால் சிலருக்கு வலிக்கலாம். எனினும் அதனை நான் மீளப்பெறப் போவதில்லை.

எனவே, கூடிய விரைவில் மக்கள் ஆணையுடன் அரசொன்று அமைய வேண்டும்" என்றார். (ம-7)

## மக்கள் கருத்தை...

அரசியலமைப்பின் பிரகாரமே பாராளுமன்றம் செயற்பட வேண்டும் என்றும், அது இல்லாமல் முறையற்ற சட்ட ஆட்சி செயற்பட முடியாது என்று கூறிய எதிர்க்கட்சித் தலைவர், 2019 பொதுத் தேர்தலின் மக்கள் ஆணைக்கு மதிப்பளித்தே தான் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடவில்லை என்றும் தெரிவித்தார்.

அத்துடன், கடந்த காலங்களில் வேலைத்திட்டத்தை அமுல்படுத்திய வண்ணம் மக்களுக்காக பெரும்சேவையை செய்ததாகத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் மக்களுக்காக முழுமையாக அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவும் தெரிவித்தார். (ம-7)

# கைத்தாங்கலாக வந்து வாக்களித்தார் சம்பந்தன்

(கொழும்பு)



ஜனாதிபதி தேர்வின் போது சம்பந்தன் நேற்று கைத்தாங்கலாக வந்து வாக்களித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்களிப்பு பாராளுமன்றத்தில் நடைபெற்ற போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தனின் பெயர் அழைக்கப்பட்டது. அப்போது, அவருக்கு உதவி செய்யுமாறு தெரிவித்தாட்சி அதிகாரியான பாராளுமன்ற செயலாளர் நாயகம் கேட்டுக்கொண்டார்.

அதன்பின்னர், சபை உதவியாளர்கள் மூவர், சம்பந்தனின் ஆசனத்துக்கு அருகில் சென்று, அவரை கைத்தாங்கலாக அழைத்துவந்தனர்.

வாக்குச் சீட்டையும் தெரிவத்தாட்சி அதிகாரி எழுந்துநின்று வழங்கினார். அதன்பின்னர், வாக்கை இடும் கூடாரத்துக்குள்ளும் அம்மூவரும் கைத்தாங்கலாகவே சம்பந்தனை அழைத்துச் சென்று வாக்குப் பெட்டிக்கு அருகில் அழைத்துச் சென்றனர்

வாக்குச் சீட்டை பெட்டியினுள் இட்டதன் பின்னர், கைத்தாங்கலாகவே அவரை, அவரது ஆசனத்துக்கு அழைத்துச் சென்று அமரச் செய்தனர். (ம-7)


துவிச்சக்கரவண்டி மூலம் பத்திரிகை விநியோகிக்க
ஆட்கள் தேவை

வட்டக்கச்சி, உருத்திரபுரம்,
அக்கராயன் (அம்பலப்பெருமாள் சந்திவரை)
ஆகிய இடங்களுக்கு துவிச்சக்கரவண்டி மூலம் வலம்புரிப் பத்திரிகை விநியோகிப்பதற்கு ஆட்கள் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும்.

076 097 3121

பொது முகாமையாளர்,
வலம்புரி



1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு : 08.10.1937 இறப்பு : 21.07.2021

அமரர் ஆறுமுகம் நவரத்தினசாமி
( இளைப்பாறிய நில அளவை உதவி அத்தியட்சகர் )

மாண்டவர் மீழ்வதில்லை என்பது விதி
ஆயினும் நீங்கள் எங்களைப்பார்க்க
மீண்டு வருவீர்கள் எனக் காத்திருக்கின்றோம்.
உங்கள் ஆத்மா ஆண்டவன் திருவடிகளில்
அமைதி காணப் பிரார்த்திக்கின்றோம்.

(C-4632)

பிரிவால் துயருறும்
கலாநிதி ந. கார்த்திகேயன்
(சிரேஷ்ட விரிவுரையாளர், பௌதிகவியல் துறை, இலங்கை திறந்த பல்கலைக்கழகம் )
திரு. ந. மகேந்திரன் (கனடா) மற்றும் குடும்பத்தினர்
திருமதி பூ. சியாமளா (ஆசிரியை )
( யா/ யாழ். இந்து மகளிர் கல்லூரி) மற்றும் குடும்பத்தினர்

புலோலி வடக்கு,
பருத்தித்துறை.
021 226 4202



31ஆம் நாள் நினைவஞ்சலி



மண் மகிழ 22 . 12 . 1932
கண் நெகிழ 21 . 06 . 2022

அமரர்
மீனாட்சி சண்முகம்
( அமரர் ஓய்வுநிலை பொலிஸ் உத்தியோகத்தர் அவர்களின் அன்பு மனைவி)

உயிர்தந்த உன்னத தெய்வமே அம்மா!
உங்கள் பேரெழில் வதனம் காணாது தவிக்கின்றோம்
எங்கள் பலவீனப் பொழுதுகளின் பலமாய் நின்று
எம்மை வாழவைத்த கடமைச் சூரியனே!
எங்கள் வரமாய் வந்த தெய்வக்கொடையே
வாழ்வியலைக் கற்றுத் தந்த ஆசானே
உங்களை நினைக்காத நாளெல்லாம் பிறவாநாளே!
அத்தனை பிறவிகளிலும் நீங்களே எங்கள் அன்னையாக

இல. 36, D 10,
உருத்திரபுரம்.

(C-4633)


குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிந்து செயற்பட்டது போதும்

# அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவோம்

## ஜனாதிபதி அழைப்பு



(கொழும்பு)

**இலங்கையின் நிலவரத்தைப் புரிந்துக் கொண்டு, இனியும் பிரிந்து செயற்படாமல் அனைவரும் ஒன்றிணைந்து பிரச்சினைகளுக்குத் தீர்வினைக் காண முன்வர வேண்டும் என்று இலங்கையின் புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**

ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டதை அடுத்து, பாராளுமன்றில் அவர் ஆற்றிய விசேட உரையின்போதே இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் கருத்து வெளியிட்ட அவர், நாடு இன்றுள்ள நிலைமை தொடர்பாக நாம் அனைவரும் நன்றாக அறிவோம்.

எனவே, என்னுடன் இணைந்து போட்டியிட்ட டலஸ் அழகப்பெரும மற்றும் அநுர குமார திஸாநாயக்கவுக்கு என்னுடன் இணைந்து பணியாற்ற வருமாறு பகிரங்கமாக அழைப்பு விடுக்கிறேன்.


அதேபோன்று, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சி.வி.விக்னேஸ்வரன் உள்ளிட்டவர்களுக்கும் அழைப்பு விடுக்கிறேன்.

அத்துடன், முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் அழைப்பு விடுக்கிறேன்.

நாம் பிரிந்து செயற்பட்ட காலம் இத்தோடு முடிவுற்று விட்டது. நாம் இனிமேல் ஒன்றாக பயணிக்க வேண்டும்.

இன்று முதல் அனைத்துத் தரப்பினருடனும் பேச்சு நடத்த நாம் தயாராகவே உள்ளோம் என அவர் தெரிவித்தார். (நி-6)

## சேலைன் போத்தலுடன் சென்று வாக்களித்த உறுப்பினர்



(கொழும்பு)

புதிய ஜனாதிபதி தெரிவுக்கான வாக்கெடுப்பு பாராளுமன்றில் நேற்று நடைபெற்றது.

இந்த தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க, டலஸ் அழகப்பெரும மற்றும் அநுரகுமார திஸாநாயக்க ஆகியோர் வேட்பாளர்களாக போட்டியிட்டனர்.

பொதுஜன முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் சமன்பிரிய ஹேரத் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் வாக்களிப்பதற்காக சேலைன் போத்தலுடன் பாராளுமன்றுக்கு சென்று வாக்களித்தார். (நி-6)

## ஜனாதிபதி ரணிலுக்கு நாமல் வாழ்த்து

(கொழும்பு)

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் 8 ஆவது நிறைவேற்று ஜனாதிபதிக்கு வாழ்த்துகள் என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ ரணில் விக்கிரமசிங்கவிற்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தனது டுவிட்டர் பக்கத்தில் இட்டுள்ள பதிவில் நாமல் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அத்துடன் நாட்டில் சட்டம் மற்றும் ஒழுங்கை நடைமுறைப்படுத்தும், நாட்டின் பொருளாதாரத்தை சீர் செய்யும் பொறுப்பு உங்களிடம் உள்ளது.

எங்கள் தேசத்தை முன்னெடுத்துச் செல்ல மும்மூர்த்திகள் உங்களை ஆசீர்வதித்து வழி காட்டட்டும் என தெரிவித்துள்ளார். (நி-6)

## புதிய ஜனாதிபதிக்கு வாழ்த்து தெரிவித்த எதிர்க்கட்சி தலைவர்



(கொழும்பு)

இலங்கையின் 8 ஆவது நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இலங்கையின் இடைக்கால ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க நேற்று தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இதனையடுத்து, பாராளுமன்றில் உரையாற்றிய ரணில் விக்கிரமசிங்க தாம் ஜனாதிபதியாக பதவியேற்கும் நிகழ்வை பாராளுமன்றத்துக்குள் நடத்த வேண்டும் என சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்தார். (நி-6)

## ஜனாதிபதித் தேர்தலை புறக்கணித்த தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி

(கொழும்பு)

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ,செல்வராஜா கஜேந்திரன் ஆகியோர் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. (நி-6)

## புதிய ஜனாதிபதியாக அறிவிக்கப்பட்ட ரணில் சூடுபிடிக்கும் காலிமுகத்திடலின் களநிலவரம்



(கொழும்பு)

இலங்கையின் புதிய ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற இரகசிய வாக்கெடுப்பில் அதிக வாக்குகளைப் பெற்று ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான அறிவிப்பு பாராளுமன்றில் உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டுள்ளது. இந்த நிலையில்நேற்று காலை முதல் காலிமுகத்திடலில் ஜனாதிபதி செயலகத்திற்கு முன்பாக அமைதியான போராட்டத்தில் ஈடுபட்டிருந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் அறிவிப்பு வெளியானதை தொடர்ந்து தமது போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

ரணில் ஜனாதிபதியாக தெரிவானமைக்கு தமது எதிர்ப்பினை தொடர்ச்சியாக தெரிவித்து வரும் நிலையில் அப்பகுதியில் களநிலவரம் சூடுபிடித்து வருகிறது. இதேவேளை காலிமுகத்திடல் கோட்டா கோ கம போராட்டக்காரர்கள், ஜனாதிபதி செயலகத்தின் முன்பாக உள்ள பண்டாரநாயக்க உருவச்சிலையை சுற்றியுள்ள 50 மீற்றர் சுற்று வட்டத்திற்குள் நுழையக்கூடாது என கோட்டை நீதிவான் நீதிமன்றம் தடையுத்தரவு பிறப்பித்துள்ளது. (நி-6)

## நாட்டுக்காக சரியான முடிவெடுத்த சஜித்

### ஓமல்பே சோபித தேரர்



(கொழும்பு)

ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான பாராளுமன்ற வாக்கெடுப்பில் இருந்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ விலகியமை ஒரு புத்திசாலித்தனமான நடவடிக்கை என தென்னிலங்கையின் பிரதான சங்கத் தலைவர் கலாநிதி. ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் நாட்டுக்காக சரியான முடிவை எடுத்தார் என்பதை நாம் அறிவோம்.

சஜித் பிரேமதாஸ அவர்களுக்கு நாம் நன்றி கூறுவதுடன், இதன் மூலம் சர்வகட்சி அமைச்சரவையையும் இடைக்கால அரசாங்கத்தையும் அமைக்கும் சந்தர்ப்பம் கிடைத்தால் அதனை மிகச் சிறந்த நடவடிக்கையாகவே பார்க்கின்றோம். என தெரிவித்தள்ளார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை கிரிக்கெட் பிரிவு III–2022

# 8 ஆவது தகுதிகாண் போட்டியில் யாழ்.ஜொனியன்ஸ் அணி வெற்றி



இலங்கை கிரிக்கெட்டின் நெறிப்படுத்தலில் யாழ்.மாவட்ட துடுப்பாட்ட சங்கம் நடத்தும் 50 ஓவர் கொண்ட தொடரின் 8 ஆவது தகுதிகாண் போட்டியில் யாழ்.ஜொனியன்ஸ் அணி, ஸ்ரான்லி அணியை 6 விக்கெட்டுகளால் வெற்றி பெற்று தமது முதலாவது வெற்றியை பதிவு செய்துள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்ரான்லி அணி 50 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 190 ஓட்டங்களைப் பெற்றது.

சத்தியபிரசன்னா-34, கஜமுகன்-32, சங்கீத்- 21 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் யாழ்.ஜொனியன்ஸ் அணி சார்பாக கானாமிர்தன் 10 ஓவர்களில் 30 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் சண்சயன் 10 ஓவர்களில் 36 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யாழ்.ஜொனியன்ஸ் அணி 22.5 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்து 191 ஓட்டங்களைப் பெற்றது. C.P. தனிஜன் ஆட்டமிழக்காது 51, அன்புஜன்-42, அகிலன்-32 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்து வீச்சில் ஸ்ரான்லி அணி சார்பாக விஷ்ணுகாணன் 4.5 ஓவர்களில் 28 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினார். தர்ஸன், பிரசாந் தலா 1 விக்கெட்டினை கைப்பற்றினர்.

இப்போட்டியின் மூலம் யாழ்.சென்றல் விளையாட்டுக்கழகம் வருடா வருடம் நடத்தும் யாழ்.நகரில் சிறந்த கழக அணித் தெரிவு நிகழ்விற்கு (RATING) யாழ்.ஜொனியன்ஸ் அணி 8.41 புள்ளிகளையும் ஸ்ரான்லி அணி 2.30 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டன. (4)

## இலங்கை கிரிக்கெட் பிரிவு III–2022

# 7 ஆவது தகுதிகாண் போட்டியில் யாழ்.பல்கலை.அணி வெற்றி

இலங்கை கிரிக்கெட்டின் நெறிப்படுத்தலில் யாழ். மாவட்ட துடுப்பாட்ட சங்கம் நடத்தும் 7 ஆவது தகுதிகாண் போட்டியில் யாழ். பல்கலைக்கழக அணி, T.YMHA அணியை 6 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்று தனது முதலாவது வெற்றியைப் பதிவு .செய்துள்ளது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ்.பல்கலைக்கழக அணி களத்தடுப்பை மேற்கொண்டது. முதலில் துடுப்பெடுத்தாடிய T.YMHA அணி 43.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 174 ஓட்டங்களைப் பெற்றது.

மகீதரன்-47, யதுர்சன்-29, சிவசங்கர்-20 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் யாழ்.பல்கலைக்கழக அணி சார்பாக 7.2 ஓவர்களில் 22 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் D.M.K.N திஸநாயக்கா 9 ஓவர்களில் 29 ஓட்டங்ளைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் கஜீபன் 7 ஓவர்களில் 32 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யாழ்.பல்கலைக்கழக அணி 26.5 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 176 ஓட்டங்களைப் பெற்றது. பிரசாந்-44, ஜவன்-32, கஜீபன்-29 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்து வீச்சில் T.YMHA அணி சார்பாக அஜன்தன், கிருசோதன், கீரன், கோவிநாத் தலா-01 விக்கெட்டினைக் கைப்பற்றினர்.

இப்போட்டியின் மூலம் யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகம் 2010 ஆம் ஆண்டிலிருந்து தொடந்து 13 வருடங்களாக நடத்தி வரும் யாழ். நகரில் சிறந்த கழக அணித் தெரிவு நிகழ்வுக்கு (RATING) யாழ்.பல்கலைக்கழக அணி 8.36 புள்ளிகளையும் T.YMHA அணி 2.14 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டன. (4)


# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2668

**காசினி**

"குற்றம் காணத் தொடங்கினால்
யாரிடமும் அன்பு செய்ய நேரம் இருக்காது"



**தயாளன்**



காது வலின்னு
டாக்டரிட்ட
போனதுக்கு
மாத்திரை
போடுங்க
சரியாயிடும்னு
சொன்னாரு
அதுதான்...

**கஸ்தூரி**

காதலித்துப் பார்...
தரையில் மிதப்பாய், விண்ணில் நடப்பாய்



அவளையே கல்யாணம் பண்ணிப்பார்...
அடுப்படியில் கிடப்பாய், அடி வாங்கியே சாவாய்.


**கேசவன்**




**பரணிதன்**



**லோஜினி**




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய ஜனாதிபதித் தெரிவில் இந்தியாவின் அழுத்தம் இருந்ததா?

## இந்திய உயர்ஸ்தானிகராலயம் நிராகரிப்பு

(கொழும்பு)

இலங்கையின் புதிய ஜனாதிபதியை தெரிவு செய்ய நேற்று பாராளுமன்றத்தில் நடத்தப்பட்ட வாக்கெடுப்புக்கு இந்தியா, இலங்கை அரசியல் தலைவர்களுக்கு அழுத்தங்களை கொடுத்ததாக வெளியாகியுள்ள ஊடக செய்திகளை முற்றாக நிராகரிப்பதாக இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. அடிப்படையற்றதும் ஆதாரமற்ற அந்த ஊடக செய்தி பொய்யானது எனவும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

ஸ்தாபிக்கப்பட்டுள்ள அரசியலமைப்புக்கு உட்பட ஜனநாயக முறை, அதன் பெறுமதி மட்டுமின்றி அரசியலமைப்புச் சட்ட ஏற்பாடுகளுக்கு உட்பட்டு இலங்கையர்கள் தமது அபிலாஷை அடைவதற்கு இந்தியா அனைத்து சந்தர்ப்பங்களில் ஒத்துழைப்புகளை வழங்கும்.

இந்தியா மற்றுமொரு நாட்டின் உள் விவகாரங்களிலோ அல்லது ஜனநாயக செயற்பாடுகளில் எந்த சந்தர்ப்பத்திலும் தலையிடாது எனவும் இந்திய உயர்ஸ்தானிகராலயம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது. (நி-6)

# பிரதமராகிறார் தினேஷ்?

(கொழும்பு)

இடைக்கால ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க நேற்று பாராளுமன்றினால் தெரிவு செய்யப்பட்டார்.

இந்நிலையில் புதிய பிரதமராக தினேஷ் குணவர்த்தன நியமிக்கப்படலாம் என தெரிய வருகின்றது.

ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க கடமையேற்ற பின்னர், தினேஷ் குணவர்த்தன பிரதமராக நியமிக்கப்படவுள்ளார். (நி-6)

# ரணில் பதவி விலகும் வரை போராட்டம் ஓயாது

## காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட ரணில் விக்கிரமசிங்க பதவி விலக வேண்டும் என காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற இரகசிய வாக்கெடுப்பின் போது இலங்கையின் 8 ஆவது நிறைவேற்று ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க தெரிவு செய்யப்பட்டார்.

இந்த நிலையில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த காலிமுகத்திடல் போராட்டக்களத்தின் பிரதிநிதிகள், ரணில் விக்கிரமசிங்க பதவி விலக வேண்டும் என்பதே தமது இரண்டாவது முக்கிய கோரிக்கை என குறிப்பிட்டனர்.

பொதுமக்களின் விருப்பத்திற்கு மாறாக ஜனாதிபதி நியமனம் செய்யப்பட்டுள்ளதால் அவர் பதவி விலக வலியுறுத்தி அமைதியான முறையில் போராட்டம் தொடரும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.


பாராளுமன்றம் இன்று மக்களின் விருப்பத்திற்கு மாறாக ஒரு முடிவை எடுத்துள்ளது எனவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

ராஜபக்ஷ ஆட்சியால் ரணில் விக்கிரமசிங்க கொண்டு வரப்பட்டுள்ளார்.

எனவே, ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஊழல் முறைமைக்கும் எதிராக எமது அமைதியான போராட்டங்கள் தொடரும் என அவர்கள் மேலும் குறிப்பிட்டுள்ளனர். (நி-6)

# மரண அறிவித்தல்

## குலநாயகம் கந்தசாமி



மலர்வு 20.10.1954 உதிர்வு 19.07.2022

தாவளை இயற்றாலையை பிறப்பிடமாகவும் கொடிகாமத்தை வசிப்பிடமாவும் கொண்ட குலநாயகம் கந்தசாமி 19.07.2022 அன்று அகால மரணம் அடைந்தார்.

இவர் காலஞ்சென்ற குலநாயகம் வள்ளிப்பிள்ளையின் அன்பு மகனும், இராசபூபதியின் (கண்டு) அன்புக் கணவரும், சின்னத்தம்பி மற்றும் காலஞ்சென்ற பாறுப்பிள்ளை அவர்களின் அன்பு மருமகனும், விஜிகரன் (லண்டன்), நிடர்சிகா, தனுசியா (லண்டன்), கனுசியா ஆகியோரின் அன்புத் தந்தையும், ஹரிணி (லண்டன்), அஸ்வின் (லண்டன்), கிசோன் (லண்டன்), யசோன் (லண்டன்), நிசோன் (லண்டன்), சர்விகா (லண்டன்), இந்துஜன், அனோஜன், லதுர்சன், வர்ஷாந், பிரஜின் ஆகியோரின் அன்பு அம்மப்பாவும், இரத்தினேஸ்வரி, கணேசமூர்த்தி, பாஸ்கரன், நாகேஸ்வரி, காலஞ்சென்ற வனஜா ஆகியோரின் அன்பு சகோதரனும், வித்தியா (லண்டன்), உதயகுமரன் (ஜேர்மனி), வினோகரன் (லண்டன்) ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற மனோன்மணி, காலஞ்சென்ற இராஜமலர், சிறிகாந்தன் (இத்தாலி), சிவபாலன், சிறிகுணராசா (லண்டன்), சிறிதரன் (சுவிஸ்), சிறிலதன், ரகுபதி (லண்டன்), ரதி, லோஜி (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று வியாழக்கிழமை (21.07.2022) காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கட்டமறிச்சான் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தொடர்புகளுக்கு:
077 070 0286
077 078 7165

குடும்பத்தினர்.

(C-4631)

# இராசிபலன்

21.07.2022
ஆடி 05, வியாழக்கிழமை
அட்டமி பிற்பகல் 1.32 மணிவரை
அச்சுவினி முன்னிரவு 7.39 மணிவரை
சுபநேரம் 7.31-9.01 மணிவரை
இராகுகாலம் 1.31-3.01 மணிவரை
அட்டமி-நவமி
சந்திராஷ்டமம் - பூரம், உத்தரம்

வளவன்




கற்பனை மிகுதியான நாள், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், போசன சுகமுண்டு, பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.




தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், மனச் சஞ்சலங்கள் கூடும் வாய்ப்புண்டு, சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம்.




குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், எடுத்த காரியங்கள் ஏளிதில் கைகூடும்.




செய்தொழிலில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், போசன நன்மையுண்டு.




தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர்.




மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், திருடர் பயமுண்டு, பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், முயற்சிகளில் சிறு தடங்கல்கள் ஏற்படலாம்.




சென்ற இடங்களில் சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.




கௌரவமான சம்பவங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு, செய்தொழிலில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.




புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், செய்தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் மேலோங்கும்.




பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், நண்பர்கள் சந்திப்பால் பரவசமடைவீர்கள், வீட்டுத்தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும்.




பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், காரிய அனுகூலமுண்டு, செய்தொழில் மேன்மையுண்டு, உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு.




வார்த்தைகளில் நிதானம் தேவை, பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும், போசன சுகமுண்டு.

உனக்குள் வாழும் கடவுளுக்கு அடிமையாக வாழப் பழகிக் கொள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாநகர காவல் பணியாளர்கள் சீருடை விவகாரம்

## வழக்கிலிருந்து மணிவண்ணன் விடுதலை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகர சபை காவல் பணியாளர்களை நியமித்த போது அவர்களின் சீருடை தொடர்பாக பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் யாழ்.மாநகர முதல்வர் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் சட்டமா அதிபர் திணைக்களம் குறித்த வழக்கை தொடர முடியாது என அறிவித்தமையால் யாழ். மாநகர முதல்வர் வழக்கில் இருந்து விடுதலை செய்யப்பட்டதுடன் இந்த வழக்கில் சான்றுப் பொருளாக நீதிமன்றத்தில் வைக்கப்பட்டிருந்த சீருடைகளும் விடுவிக்கப்பட்டன.

கடந்த வருடம் ஏப்ரல் மாதம் தமிழீழ விடுதலைப் புலிகளை மீள் உருவாக்க முயற்சித்த குற்றச்சாட்டில் பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் யாழ். மாநகர சபை முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (4-6-33)



## இலங்கை வங்கி பரு.கிளை புதிய இடத்திற்கு மாற்றம்





(கரணவாய்)

இலங்கை வங்கியின் பருத்தித்துறை கிளை, பருத்தித்துறை நகர்ப்பகுதியில் புதிய கட்டடத்திற்கு இடமாற்றப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக பருத்தித்துறை வீரவாகு கட்டடத்தில் இயங்கி வந்த இலங்கை வங்கி கிளை கடந்த திங்கட்கிழமை முதல் பருத் தித்துறை பிரதான வீதியில் இலக்கம் 86 எனும் இடத்தில் புதிய கட்டடத்தில் மணிக்கு திறந்து வைக்கப்பட்டது.

இலங்கை வங்கி பருத்தித்துறை கிளையின் முகாமையாளர் இ.இரட்ணராஜ் தலைமையில் இடம் பெற்ற இந் நிகழ்வில் முதன்மை விருந்தினராக இலங்கை வங்கி வட மாகாண உதவிப் பொது முகாமையாளர் வ.சிவானந்தன் கலந்து கொண்டு திறந்து வைத்தார். (4-6-60)

## வெங்காய மூட்டைகள் திருட்டு!

(குப்பிழான்)

குப்பிழான் தெற்குப் பகுதியில் கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு தோட்டத்திற்குள்ளிருந்து இரண்டு வெங்காய மூடைகள் இனந் தெரியாத நபர்களால் திருடிச் செல்லப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

சிறுபோக வெங்காயச் செய்கை அறுவடை தற்போது வலிகாமத்தின் பல பகுதிகளிலும் தற்போது மும்முரமாக இடம்பெற்று வருகிறது.

இந்நிலையில் மேற்படி தோட்டத்திற்குள் நடுகை செய்யப்பட்ட வெங்காய அறுவடையைத் தொடர்ந்து வெங்காயங்களை தம்புள்ளப் பொருளாதார மத்திய நிலையத்திற்கு விற்பனைக்காக எடுத்துச் செல் வதற்காக பல மூடைகளுக்குள் வெங்காயங்களை நிரப்பி அடுக்கி விட்டுத் தோட்ட உரிமையாளரான விவசாயி தனது வீடு சென்று வருவதற்குள் குறித்த மூடைகளிலிருந்து இரண்டு மூடைகள் இனந் தெரியாத நபர்களால் திருடிச் செல்லப்பட்டுள்ளது.(4-6-18)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

இணுவில் தெற்கு ஞானாம்பிகை உடனாய ஞானலிங்கேச்சுரப் பெருமானின் பெருந் திருவிழா நாளை 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது. அந்த வகையில் எதிர்வரும் 31 ஆம் திகதி காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் மாலை 7 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் இடம் பெறவுள்ளது. (4-6)

## யோகக்கலை வகுப்புகள் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவ கார அலகினால் இலவசமாக நடத்தப்பட்டு வருகின்ற யோகக் கலை கற்கை நெறி நல்லூர்க் கந்தன் ஆலய பின் வீதியில் அமைந்துள்ள நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் நடைபெற்று வருகின்றது. எதிர்வரும் 2 ஆம் திகதி அன்று நல்லூர் கந்தன் ஆலய வருடாந்த மஹோற்சவத் திருவிழா ஆரம்பமாகவிருப்பதனால் திரு விழாக்காலங்களில் வீதித் தடைகள் போடப்படுவதன் கார ணமாக அப்பாடசாலையில் வகுப்புகளை நடத்த முடியாத காரணத்தால் தற்காலிக ஏற்பாடாக திருநெல்வேலி பழங் கிணற்றடி பிள்ளையார் ஆலய திருமண மண்டபத்தில் எதிர் வரும் 6 ஆம் திகதியிலிருந்து [illegible] விவகார அலகின் உதவிச்செயலாளர் அறிவித்துள்ளார். (4-6)

## 9 1/4 பவுண் நகை திருட்டு சந்தேகநபர் ஒருவர் கைது

(கரணவாய்)

ஆலயத்தில் வைத்து பெண் ஒருவருரின் 9 1/4 பவுண் தங்க நகையை திருடிய சந்தேக நபர் ஒருவர் பருத்தித் துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கொடிகாமம் பகுதியைச் சேர்ந்த பெண்ஒருவர்வல்லிபுர ஆழ்வார் ஆலயத்திற்கு சென்றுள்ளார்.

முன்னதாக அருகாமையில் உள்ள பிள்ளையார் ஆலயத்திற்கு சென்ற போது அங்கு வைத்து அவரின் 7 3/4 பவுண் தாலிக் கொடியும் ஒன்றரைப் பவுண் தங்கச் சங்கிலியும் அறுத்துச் செல்லப்பட்டது.

இது தொடர்பில் பருத்தித் துறை பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். (4-5-60)

## சுன்னாகம் கதிரமலைச் சிவன் சொர்ணாம்பிகை அம்பாள் மஹோற்சவம்

(குப்பிழான்)

சுன்னாகம் கதிரமலைச் சிவன் சொர்ணாம்பிகை அம்பாள் ஆலய வருடாந்த ஆடிப்பூர மஹோற்சவம் நாளை மறு தினம் 23 ஆம் திகதி சனிக் கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்ப மாக உள்ளது.

இவ்வாலய ஆடிப்பூர மஹோற்சவம் தொடர்ந்தும் பத்துத் தினங்கள் சிறப்பாக இடம்பெற உள்ளதுடன் எதிர்வரும் 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்குத் தேர்த்திரு விழாவும் மறுநாள் 1 ஆம் திகதி திங்கட்கிழமை ஆடிப் பூர தினத்தன்று மாலை 5 மணிக்கு ஆலயத் தீர்த்தக்கேணியில் தீர்த்தோற்சவமும், அன்றையதினம் இரவு கொடியிறக்க உற்சவமும் இடம் பெற உள்ளதாக மேற்படி ஆலயப் பிரதமகுரு சிவ ஸ்ரீ நா.சர்வேஸ்வரக் குருக்கள் தெரிவித்துள்ளார். (4-6-18)

## காரைநகர் கடற்பரப்பில் 575 கிலோ கஞ்சா மீட்பு

## இருவர் கைது





(யாழ்ப்பாணம்)

காரைநகர் கடலில் வைத்து 575 கிலோ கஞ்சாவுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காங்கேசன்துறை கடற்படையினர் நேற்று முன் தினம் இரவு மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பின் போது மாத கலை சேர்ந்த சந்தேக நபர்கள் இருவரும் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன் போது அவர்கள் பய ணித்த படகும் கைப்பற்றப்பட்டது. கைது செய்யப்பட்டவர்களை மேலதிக விசாரணைகளுக்காக காங்கேசன் துறை கடற்படை முகாமிற்கு கடற் படையினர் அழைத்துச் சென்றுள்ளனர். (4-6-33-60-104)

## சட்டவிரோதமாக எரிபொருள் விற்றவருக்கு அபராதம்

(கரணவாய்)

எரிபொருளினை சட்டவிரோதமாக விற்பனை செய்த போது பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நபருக்கு ஆயிரம் ரூபாய் தண்ட பணம் விதித்ததுடன் எரிபொருளினை அரசவுடமை ஆக்குமாறும் பருத்தித்துறை நீதிமன்ற மேலதிக நீதவான் ஏ.ஜி.அலெக்ஸ்ராஜா உத்தரவிட்டார்.

கடந்த வாரம் புலோலிப் பகுதியில் நபர் ஒருவர் ஏழரை லீற்றர் பெற்றோலினை விற்ற சமயம் கைது செய்யப்பட்டிருந்தார். அவரின் உடமையில் 45 லீற்றர் டீசலும் இருந்துள்ளது.

கைது செய்யப்பட்ட நபர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார். இவ் வழக்கு முன்நகர்த்தல் பத்திரம் மூலம் நேற்று முன் தினம் செவ்வாய்க் கிழமை மன்றில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது சந்தேக நபர் குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து அவருக்கு ஆயிரம் ரூபாய் தண்டப்பணம் விதித்ததுடன் எரிபொருளினை புலோலி பலநோக்கு கூட்டுறவுச் எரி பொருள் நிரப்பு நிலையத்தில் ஒப்படைத்து பணத்தினை செலுத்துமாறு நீதவான் உத்தரவிட்டார். (4-6-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடைபெறுகிறார் தம்மிக்க




(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் தம்மிக்க பெரேரா இன்று பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்யவுள்ளதாக் அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முன்னாள் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்ததையடுத்து வெற்றிடமாகிய பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கு தம்மிக்க பெரேரா கடந்த ஜூன் மாதம் 22 ஆம் திகதி பாராளுமன்றத்திற்கு பிரவேசித்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# புதிய ஜனாதிபதி தெரிவு களநிலைமைக்கு முரணானது

## அநுரகுமார திஸாநாயக்க



(கொழும்பு)

பாராளுமன்றத்துக்குள் இடம்பெற்ற ஜனாதிபதி தெரிவானது, களத்தில் உள்ள நிலைமைக்கு் முரணானது என்று தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

போராட்டக்களத்தில் விடுக்கப்பட்டு வரும் கோரிக்கைகள் பாராளுமன்றில் பிரதிபலிக்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாராளுமன்றில் நேற்று இடம்பெற்ற ஜனாதிபதி தெரிவின் பின்னர் அவர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டார்.(நி-6)

# ஜனாதிபதியாக ரணில் இன்று பதவிப்பிரமாணம்

(கொழும்பு)

இலங்கை சோசலிசக் குடியரசின் எட்டாவது நிறை வேற்று அதிகார ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க இன்று வியாழக் கிழமை காலை பதவிப் பிரமாணம் செய்யவுள்ளார்.

பதவிப்பிரமாண நிகழ்வு பாராளுமன்ற வளாகத்தில் இன்று இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-6)

# ரயில் பயணச்சீட்டிற்கு தட்டுப்பாடு

(கொழும்பு)

ரயில் பயணச்சீட்டிற்கான தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக ரயில்வே பொறுப்பதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

ரயிலில் பயணிக்கும் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதை அடுத்து இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக சங்கத்தின் தலைவர் சுமேத சோமரத்ன குறிப்பிட்டார்.

பயணச்சீட்டுகளை அச்சிடுவதற்கான பணியாளர்கள் பற்றாக்குறை காணப்படுவதாக ரயில்வே பொது முகாமையாளர் தம்மிக்க ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

இதற்கான உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ரயில்வே பொது முகாமையாளர் தெரிவித்தார். (நி-6)

# பாராளுமன்றம் தொடர்ந்தும் பொதுஜனபெரமுனவின் பிடியில்

## சுமந்திரன் எம்.பி தெரிவிப்பு



(கொழும்பு)

பாராளுமன்றம் தொடர்ந்தும் பொதுஜனபெரமுனவின் பிடியில் உள்ளது. அதனை கலைக்க வேண்டும் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தனது டுவிட்டர் செய்தியில் தெரிவித்துள்ளார்.

மக்கள் ஆணையை இழந்த பொதுஜனபெரமுனவின் பிடியிலேயே இன்னமும் தான் உள்ளதை மீண்டும் பாராளுமன்றம் வெளிப்படுத்தியுள்ளது.

பாராளுமன்றத்தை கலைக்கவேண்டும் என்பதை மீண்டும் தெரிவிக்கின்றேன் என அவர் டுவிட் செய்துள்ளார்.(நி-6)

# ஜூலை 27 ஆம் திகதி வரை பாராளுமன்றம் ஒத்திவைப்பு

(கொழும்பு)


பாராளுமன்றம் எதிர்வரும் 27 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப் பட்டுள்ளது.

ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான இரகசிய வாக்கெடுப்பிற்காக நேற்று பாராளுமன்றம் கூடியது.

புதிய ஜனாதிபதி தெரிவை அடுத்து சபை நடவடிக்கைகள் நிறைவடைந்தன.

எதிர்வரும் 27 ஆம் திகதி வரை பாராளுமன்றம் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (நி-6)

# காலிமுகத்திடல் பகுதியில் விசேட பொலிஸ் பாதுகாப்பு



(கொழும்பு)

காலிமுகத்திடல் போராட்டக்களம் பகுதியில் விசேட பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ இந்த விடயத்தினைத் தெரிவித்துள்ளார். குறித்த பகுதியில் போராட்டம் நடத்தப்படவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ள நிலையில் இவ்வாறு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

நூற்றுக்கும் மேற்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் இராணுவத்தினர் குறித்த பகுதிக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (நி-6)


## வீடு வாடகைக்கு தேவை

யாழ்.நகரை அண்மித்த பகுதியில் சிறிய குடும்பம் ஒன்று வசிக்கக் கூடிய சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்குத் தேவை.

077 745 1625

## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: உத்திராடம் 4<br>கி.பா:29 சூரி 12 செவ் 2 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:A/L பிரான்ஸ் PR இல்லை<br>எதிர்பார்ப்பு:நற்பண்புள்ள பெண்<br>தொ.இ: B/10108 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்:உத்தராடம் 3<br>கி.பா:46 சூரி 7 செவ் 3 இல்<br>உயரம்:5'1"<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு:வெளிநாடு மட்டும்<br>தொ.இ:G/7262 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்:திருவோணம்<br>கி.பா:32 சூரி 11 செவ் 10 இல்<br>உயரம்:5'7"<br>தகைமை/தொழில்: A/L சொந்தக்கடை<br>எதிர்பார்ப்பு: காரைநகர் விரும்பத்தக்கது<br>தொ.இ: B/10110 | பிறப்பு:1988 இந்து<br>நட்சத்திரம்:பூசம் 3<br>கி.பா: 23 ¼ சூரி 5 செவ் 2 இல்<br>உயரம்:5'4"<br>தகைமை/ தொழில்: BA,BGDE ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு:அரச.தனியார் தொழில் உள்நாடு மட்டும்<br>தொ.இ: G/11592 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம் 3<br>கி.பா:11 ½ சூரி 9 செவ் 2 இல்<br>தகைமை/ தொழில்: மின்சாரம் சம்மந்தப்பட்டவேலை<br>எதிர்பார்ப்பு: சாதாரணபடித்த பெண்<br>தொ.இ: B/10113 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: பூரம் 4<br>கி.பா:சூரி 6 செவ் 5 இல்<br>தகைமை/தொழில்:O/L<br>எதிர்பார்ப்பு:அரச உத்தியோகம்<br>தொ.இ:G/10392 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம் : மிருகசீரிடம் 4<br>கி.பா:சூரி 10 செவ் 11 இல்<br>உயரம்:5'8"<br>தகைமை/தொழில்: BSc ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு :அரச தொழில் ஆசிரியர் விரும்பத்தக்கது.<br>தொ.இ: B/10122 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 4<br>கி.பா: சூரி.செவ் 11 இல்<br>உயரம் :5'8"<br>தகைமை/தொழில்: Audiologist (UK)<br>எதிர்பார்ப்பு: Doctor, Engineer<br>தொ.இ:G/10403 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 95

# ஒரு தலைவனுக்குரிய தகுதி



ஓர் அரசர் தன் மகனுக்கு போர்ப் பயிற்சி அளிப்பதற்காக ஒரு பயிற்சியாளரிடம் சேர்ப்பிக்கிறார். ஆறு மாதங்கள் கழித்து வருமாறு என்று பயிற்சியாளர் சொன்னது ஞாபகம் அரசருக்கு வர பயிற்சி பாசறைக்கு செல்கிறார்.

அங்கு அவரது மகன் மிக ஆக்ரோஷமாக பயிற்சி செய்து கொண்டிருப்பதைக் கண்டார். அவனது தோள்கள் திணவெடுத்திருக்கின்றன. அங்கிருக்கும் தூண்கள், பலகைகள் என்று அனைத்தையும் அவன் கைகள் பதம்பார்த்திருந்தன. அவனது உடலெங்கும் தழும்புகளால் நிறைந்திருந்தன. மிகுந்த திருப்தியுற்ற அரசர் பயிற்சியாளரிடம் சென்று நன்றி கூறி தனது மகனை அழைத்து செல்லலாமா? என்று கேட்டார்.

"அவன் இன்னும் தயாராகவில்லை. இன்னும் ஆறு மாதங்கள் கழித்து வாருங்கள்" என்றார். அரசரும் குழப்பத்துடன் சரி என்று சொல்லி சென்றுவிட்டார்.

அடுத்த ஆறு மாதங்கள் கழித்து மீண்டும் சென்றார். அப்போது அவரது மகன், மாமிச மலை போல் இருந்த, அந்த பயிற்சி பாசறையிலேயே 'மிகச்சிறந்த' வீரனுடன் மோதிக்கொண்டிருந்தான். 'மாமிச மலை' தான் வெல்வான் என்றிருந்த கணத்தில், சட்டென்று அவனை புரட்டிப்போட்டு வீழ்த்தி, சீற்றத்துடன் கர்ஜனை செய்தான் மகன். முகமெல்லாம் பூரிப்புடன் பயிற்சியாளரை பார்த்து, "இப்போது அவனை அழைத்து செல்லலாமா" என்றார்.

"இல்லை அவன் இன்னும் தயாராகவில்லை, இன்னும் ஆறு மாதங்கள் கழித்து வாருங்கள்" என்றார். தயக்கத்துடன் விடைபெற்ற அரசர் குழப்பத்துடன் நாடு சேர்ந்தார்.

அடுத்த ஆறு மாதங்கள் கழித்து மீண்டும் பயிற்சி பாசறைக்கு வந்தார். அப்போது அவரது மகன் சண்டை நடக்கும் இடத்தில் இருந்து விலகி நண்பர்களுடன் மழையை ரசித்துக்கொண்டிருந்தான்.


அரசர் பயிற்சியாளரை சந்தித்த முதல் நிமிடத்திலேயே "இப்போது அவன் தயாராய் இருக்கிறான், நீங்கள் அழைத்து செல்லலாம்" என்றார்.

"அவன் ஆக்ரோஷமாக பயிற்சி செய்து கொண்டிருக்கும் போதெல்லாம் அவன் தயாரில்லை என்று சொன்ன நீங்கள், அவன் அமைதியாய் அமர்ந்திருக்கும் போது மட்டும் அழைத்து செல்ல சொல்கிறீர்களே ஏன்" எனக் கேட்டார்.

"அரைகுறையின் உச்சம் தான் ஆக்ரோஷம். வீரத்தின் உச்சம் என்றும் அமைதி தான்" என்றார் பயிற்சியாளர்.

"புரியவில்லை" என்றார் அரசர்.

"எப்பொழுது ஒருவனுக்கு திறமை குறைவாக இருக்கிறதோ, எப்பொழுது ஒருவனுக்கு தன் மீது நம்பிக்கை இல்லாமல் இருக்கிறதோ அப்பொழுது தான் அவன் ஆக்ரோஷமாக இருப்பான். எப்பொழுது ஒருவனுக்கு மற்றவர் மேல் அன்பு வருகிறதோ, எப்பொழுது ஒருவன் முழு திறமையையும் அடைகிறானோ அப்பொழுது அவன் அமைதியில் ஐக்கியமாவான். அது தான் ஒரு தலைவனுக்குரிய தகுதி. உங்கள் மகன் நாடாளும் தகுதி பெற்று விட்டான். அவனை அழைத்து செல்லுங்கள்" என்றார்.




Kelan Keerthana

அன்பு வாசகர்களே!
முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் "முகநூல் தரிசனம்" பகுதிக்கு உங்கள் பெயரைக் குறிப்பிட்டு Valampurii Seithy எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது 076 636 3378 எனும் viber இலக்கத்திற்கு அல்லது valampurii@yahoo.com எனும் E-Mail இற்கு அனுப்பி வையுங்கள்.

## உலக அரங்கில் தனிமைப்படுத்தப்பட்ட ரஷ்ய ஜனாதிபதி

### வெள்ளை மாளிகை தகவல்




(வோஷிங்டன்)

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் அரசுமுறை பயணமாக ஈரான் சென்றுள்ளார்.

ஈரான் ஜனாதிபதி அயதுல்லா அலி காமேனி, ஈராக் ஜனாதிபதி இப்ராகிம் ரைசி மற்றும் துருக்கி ஜனாதிபதி தையூப் எர்டோகன் ஆகியோரை சந்தித்து ஆலோசனை நடத்தினார்.

இந்த சந்திப்பின்போது பல்வேறு முக்கிய விவகாரங்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டது. இந்நிலையில், ரஷ்ய ஜனாதிபதி புடினின் ஈரான் பயணம் உலக அரங்கில் அவர் தனிமைப்படுத்தப்பட்டிருப்பதை எடுத்துக்காட்டுகிறது என வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.(நி-6)

# ரஷ்யா

# பொருளாத

## ரஷ்ய ஜன

(மொஸ்கோ)

மேற்குலக நாடுகள்
உணவு உற்பத்திகளை
ஜனாதிபதி புடின் கோர

கிழக்கு நாடுகளுக்கான தனது இராஜதந்திர பயணத்தை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி புடின் செய்தியாளர்களிடம் தெரிவிக்கும் போது, உலகம் பொருளாதார நெருக்கடியினுள் சென்று கொண்டு இருக்கின்றது.

பொருளாதார நெருக்கடி என்று சொல்வதை விட உணவுப் பற்றாக்குறை என்று

செ
நா
ஆ
வி
ள்
உ

# உக்ரைனின் முதல் பெண்மணி

# அமெரிக்கா விஜயம்





(வோஷிங்டன்)

உக்ரைன் ஜனா
பதி விளாடிமிர் ஜெல
ஸ்கியின் மனைவியு
முதல் பெண்மணி
மான ஒலேனா ஜெ
ன்ஸ்கா நேற்று மு
தினம் வோஷிங்ட
க்கான தனது உய
மட்ட பயணத்தின் ஒ
பகுதியாக வெள்ளை
மாளிகைக்கு விஜய
செய்தார்.

அவரை அமெரிக்க
வின் ஜனாதிபதி ஜே
பைடன் மற்றும் முத
பெண்மணி ஜில் பைட
பூங்கொத்து கொடுத்
வரவேற்றனர்.

உக்ரைனின் தேசி
கொடியின் வண்ண
கொண்ட மஞ்சள் சூரி
காந்தி, நீல ஹைட்
ஞ்சா மற்றும் வெள்ளை
ஓர்க்கிட் பூக்களை
கொண்ட பூங்கொத்
கொடுத்து அவரை பைட
வரவேற்றார். (நி-6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ... மீதான தடைகளை நீக்கி

# ...தார நெருக்கடிக்கு தீர்வு காணுங்கள்

# ...னாதிபதி புடின் வேண்டுகோள்

**...டுகள் ரஷ்யா மீதான தடைகளை உடன் நீக்கி, ரஷ்யாவின் ...திகளை உடன் ஏற்றுமதி செய்ய வழி செய்யமாறு ரஷ்ய ...கோரிக்கை விடுத்துள்ளார்.**



...ஜ ...ா ...ம் ...பி ...ல் ...று

சொல்வது தான் சரி.

அதற்கு காரணம் மேற்குலக நாடுகளின் சுயநல சிந்தனையே ஆகும். மேற்குலக நாடுகள் ரஷ்யாவிற்கு எதிராக தடைகளை விதித்துள்ளமையினால் ரஷ்யாவின் உணவு உற்பத்திகளை ஏற்றுமதி செய்ய முடியாத நிலை தோன்றியுள்ளது.

ரஷ்ய மக்கள் உணவு தட்டுப்பாடின்றி வாழ்கின்றார்கள். அவர்களுக்கு போதிய ளவு உணவு இருக்கின்றது.

அத்துடன் நாம் எமது ஏற்றுமதிகளை வழமை போன்று மேற்கொள்ள ஆயத்தமாகவே இருக்கின்றோம்.

ஆனால், மேற்குலகின் தடைகள் காரணமாக அவற்றை மேற்கொள்ள முடியாத சூழல் காணப்படுகின்றது.

இதனால் சிறிய நாடுகள் குறிப்பாக ஆபிரிக்க நாடுகள் பலமான உணவுப் பற்றாக்குறையினால் பாதிக்கப்பட்டு வருகின்றன என அவர் தெரிவித்தார். (நி-6)

## ...ணி ...ம்

...ன்)
...ஜனாதி ...ஜெலன் ...னவியும் ...மணியு ...ா ஜெலெ ...று முன் ...ஷிங்டனு ...உயர் ...தின் ஒரு ...வள்ளை ...விஜயம்

...மெரிக்கா ...பதி ஜோ ...ம் முதல் ...பைடன் ...கொடுத்து

...ன் தேசிய ...ண்ணம் ...சள் சூரிய ...ஹெட்ரே ...வெள்ளை ...க்களை ...கொத்தை ...பைடன் (நி-6)

## ஹைப்பர்சோனி ஏவுகணையை பரிசோதித்தது அமெரிக்கா



(வோஷிங்டன்)

அமெரிக்கா, ஹைப்பர் சோனிக் ஏவுகணையை சோதனை செய்துள்ளது. இது தொடர்பாக அந்நாட்டின் இராணுவ தலைமையகமான பென்டகன் கூறும்போது, "ஹைப்ப்ர் சோனிக் ஏவுகணையை சோதனை செய்து பார்க்கப்பட்டது. இது வெற்றிகரமாக அமைந்தது. 2013 ஆம் ஆண்டு முதல் நடத்தப்பட்ட 3 ஆவது ஹைப்பர் சோனிக் ஏவுகணை இதுவாகும்" என்று தெரிவித்துள்ளது.

ஹைப்பர் சோனிக் ஏவுகணை ஒலியை விட 5 மடங்கு வேகமாக செல்லக்கூடியது. இவ்வகை ஹைப்பர் சோனிக் ஏவுகணைகள் வளி மண்டலத்தில் உள்ள காற்றை உறிஞ்சி கூடுதல் உந்து சக்தியை பெருக்கும் ஆற்றல் கொண்டவை. (நி-6)

## அமெரிக்காவில் வெப்ப அலை மக்களுக்கு எச்சரிக்கை விடுப்பு

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும் வெப்பநிலை காரணமாக 100 மில்லியன் மக்களுக்கு அவசர வானிலை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் எதிர்வரும் நாட்களில் வெப்பநிலை அதிகபட்சமாக 113F வரையில் பதிவாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

குறித்த வெப்பநிலையானது சஹாரா பாலைவன வெப்பத்தைவிடவும் அதிகமாகும்.

இதனையடுத்து அமெரிக்காவில் உள்ள 20 இற்கும் மேற்பட்ட மாகாணங்களுக்கு வெப்ப அலை தொடர்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த அபாயகரமான வெப்ப அலை அமெரிக்காவின் பெரும் பகுதியில் நீடிக்கும் என்பதால், மொத்தமாக 100 மில்லியன் மக்கள் பாதிக்கப்படலாம் என கூறப்படுகிறது.

மேலும், இந்த வாரம் ஐரோப்பாவில் இதற்கு இணையான வெப்ப அலை வீசும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதால், ஸ்பெயினின் ரயில் சேவை முடக்கப்பட்டுள்ளது.

அச்சுறுத்தும் வெப்ப அலை காரணமாக தென்கிழக்கு வயோமிங் மற்றும் மேற்கு நெப்ராஸ்காவிற்கு அருகில் தீ விபத்து ஏற்படவும் வாய்ப்பிருப்பதாகவும் எச்சரிக்கப்பட்டுள்ளது. (நி-6)

## ரஷ்ய இராணுவ கப்பலை தடுத்து வைத்துள்ள இந்தியா

(டில்லி)

எஸ்டோனியா நிறுவனத்திற்கு சொந்தமான கப்பலில் ரஷ்யா இந்திய கடற்படைக்கு இராணுவ தளபாடங்களை ஏற்றிச் சென்ற போது கொச்சி கடற்பரப்பில் மேற்படி கப்பல் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் இதற்கான காரணத்தை உடன் தெரிவிக்குமாறு ரஷ்யா இந்தியாவிடம் கோரியுள்ளது.

சர்வதேச கடல் அனுமதியுடன் மேற்படி இராணுவ தளபாடங்களை ரஷ்யா இந்தியாவிற்கு அனுப்பி வைத்துள்ள போதிலும் இந்திய எல்லைப் பகுதியில் வைத்து குறித்த கப்பல் கொச்சி கடற் காவல்துறையினராலும்.

எஸ்டோனிய நிறுவன அதிகாரிகளினாலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதற்கட்ட விசாரணைகளின் போது, மேற்படி கப்பல் தனது எரிபொருள் பணத்தொகையான சுமார் 1.87 கோடி இந்திய ரூபாய்களை செலுத்த வில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் தொடர்ந்தும் விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்ற அதே வேளை ரஷ்யா மேற்படி விவகாரம் தொடர்பில் அதிக விசனம் அடைந்திருப்பதாகவும் சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடி மாத இராசி பலன்கள்

## 17.07.2022 - 16.08.2022



வாய்ப்பைத் தேடிச் சென்றால் தான் வெற்றி காண இயலும் என்று சொல்லும் துலாம் இராசி வாசகர்களே!

ஆடி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசியில் கேதுவும், சப்தம ஸ்தானத்தில் இராகுவும் சஞ்சரிக்கிறார்கள். அர்த்தாஷ்டமச் சனி வக்கிர இயக்கத்தில் இருப்பதால் உடல்நலம் சீராகி உற்சாகப்படுத்தும்.

**சிம்ம - புதன் சஞ்சாரம்**

ஆடி 13 ஆம் திகதி, சிம்ம இராசிக்கு புதன் வருகிறார். உங்கள் இராசிக்கு 9, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன் லாப ஸ்தானத்திற்கு வரும்பொழுது, பெற்றோர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். பூர்வீகச் சொத்துக்களை விற்றுவிட்டு புதிய சொத்துக்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். வெளிநாட்டு வேலை கைகூடலாம்.

**கடக - சுக்கிரன் சஞ்சாரம்**

ஆடி 22 திகதி, கடக இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். உங்கள் இராசி நாதன் 10 ஆம் இடத்திற்கு வரும் பொழுது மிகுந்த நற்பலன்களைக் கொடுக்கும். தொழில் வளம் சிறப்பாக இருக்கும். கேட்ட இடத்தில் தொகை கிடைக்கும். தொழிலை விரிவு செய்ய முயற்சிப்பீர்கள். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். குடும்பப் பிரச்சினை குறையும். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு.

**குருவின் வக்கிர இயக்கம்**

ஆடி 23 ஆம் திகதி, மீன இராசியில் குரு வக்கிரம் பெறுகிறார். உங்கள் இராசிநாதன் சுக்ரனுக்கு, குரு பகை கிரகமாகும். அந்த குரு, வக்கிரமாக இருக்கையில் உடன் பிறப்புகளுடன் மோதல் உருவாகலாம். வழக்குகள் உங்களுக்கு எதிராக திரும்பலாம். வருமானப் பற்றாக்குறை அதிகரிக்கும். தொழிலை மாற்றுவதில் பிரச்சினைகள் ஏற்படும். எதையும் ஒரு முறைக்குப் பலமுறை யோசித்துச் செய்வது நல்லது. குரு பகவான் 6 இற்கு அதிபதியாகவும் விளங்குவதால் உத்தியோகத்தில் மாற்றம் ஏற்படும். பிற நிறுவனங்களில் இருந்து அதிக ஊதியத்துடன் அழைப்பு வரலாம். சுய ஜாதகத்தை ஆராய்ந்து பார்த்து அதை ஏற்றுக் கொள்வது நல்லது. எதிரிகள் பலம்




குறையும். புதிய வாகனம் வாங்க முயற்சிப்பீர்கள். பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகள் கிடைக்கும்.

**ரிஷப - செவ்வாய் சஞ்சாரம்**

ஆடி 25 ஆம் திகதி, ரிஷப இராசிக்கு செவ்வாய் செல்கிறார். உங்கள் இராசிக்கு அஷ்டம ஸ்தானத்திற்கு செவ்வாய் வருவதால், ஆரோக் கியத்தில் மிகமிக கவனத்துடன் செயற்பட வேண்டும். வாகனங்களில் செல்லும் பொழுது கவனம் தேவை. இடமாற்றங்கள் எதிர்பாராத விதத்தில் வரலாம். உத்தியோகத்தில் திடீர் மாற் றங்கள் வந்து சேரும். "யாரையும் எளிதில் நம்பமுடியவில்லையே" என்று கவலைப்படுவீர்கள். இம் மாதம் வெள்ளிக்கிழமை தோறும் உமாமகேஸ்வரரை வழிபடுவதன் மூலம் உயர்வு காணலாம்.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் அர்த்தாஷ்டமச் சனி வக்கிரம் பெற்றிருப்பதால் புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பொருளாதாரம் திருப்தி தரும். கணவன் - மனைவிக்குள் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. பிள்ளைகளின் சுபகாரியங்கள் முடிவாகும். உறவினர் ஒத்துழைப்பு கிடைக்கும். பணிபுரியும் பெண்களுக்கு நல்ல வாய்ப்புகள் வந்து சேரும். அலுவலகத்தில் கேட்ட சலுகை கிடைக்கும். சனி ஆதிக்கம் இருப்பதால் அனுமனை வழிபடுங்கள்.

## ஆடை, ஆபரண சேர்க்கையுண்டு!

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



விடாமுயற்சியே வெற்றிக் கனியை எட்டிப்பிடிக்கும் வழி என்று சொல்லும் விருச்சிக இராசி வாசகர்களே!

ஆடி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் செவ்வாய் சொந்த வீட்டில் பலம் பெற்று சஞ்சரிக்கிறார். குருவின் பார்வை உங்கள் இராசியில் பதிகிறது. எனவே நற்பலன்கள் அதிகம் நடைபெறும்.

**சிம்ம - புதன் சஞ்சாரம்**

ஆடி 13 ஆம் திகதி, சிம்ம இராசிக்குப் புதன் வருகிறார். உங்கள் இராசிக்கு அஷ்டம - லாபாதிபதியானவர் புதன். லாபாதிபதியான அவர் தொழில் ஸ்தானத்திற்கு வரும் போது தொழில் வளம் சிறப்பாக இருக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு ஊதிய உயர்வும், உயர்ந்த பொறுப்புகளும் கிடைக்கும். நினைத்த காரியங்களை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள். புதிய ஒப்பந்தங்கள் வந்துசேரும். குடும்பத்தில் உதிரி வருமானம் கிடைக்கும்.

**கடக - சுக்கிரன் சஞ்சாரம்**

ஆடி 22 ஆம் திகதி, கடக இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 7, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். அவர் பாக்கிய ஸ்தானத்தில் சூரியனோடு இணைந்து சஞ்சரிக்கும்போது, பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். புதிய மனிதர்களின் சந்திப்பு கிட்டும். தொழில் வளர்ச்சி அதிகரிக்கும். கூட்டு முயற்சியில் சில காரியங்கள் வெற்றியாகும். புதிய வாகனம் வாங்குவீர்கள்.

**குருவின் வக்கிர இயக்கம்**

ஆடி 23 ஆம் திகதி, மீன இராசியில் சஞ்சரிக்கும் குரு பகவான் வக்கிரம் பெறுகிறார். தன்சொந்த வீட்டிலேயே குரு வக்கிரம் பெற்றிருப்பதால் எதிர்பார்த்த நல்ல மாற்றங்கள் ஏற்படும். உங்கள் இராசிக்கு தனாதிபதியானவர் குரு என்பதால், ஒரு தொகை செலவழிந்த பிறகே அடுத்த தொகை கைக்கு கிடைக்கும். குடும்பத்தில் உள்ளவர்களை அனுசரித்துச் செல்லுங்கள். சுபகாரியங்கள் முடிவாகும். வீடு, இடம் வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். பூர்வ புண்ணிய ஸ்தானத்திற்கும் குரு பக




வான் அதிபதி என்பதால், அதன் வக்கிர காலத்தில் பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்ளுங்கள். பாகப்பிரிவினை உங்களுக்குச் சாதகமாக அமையும். உத்தியோகஸ்தர்கள், சுயதொழில் தொடங்க முயற்சி செய்வர்.

**ரிஷப - செவ்வாய் சஞ்சாரம்**

ஆடி 25 ஆம் திகதி, ரிஷப இராசிக்கு செவ்வாய் செல்கிறார். உங்கள் இராசி நாதன் செவ்வாய் சப்தம ஸ்தானத்தில் சஞ்சரித்து உங்கள் இராசியைப் பார்ப்பது யோகம்தான். துணிவும், தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். அதிகார வர்க்கத்தினரின் ஆதரவு கிடைக்கும். தொழில், உத்தியோகத்தில் எதிர்பார்த்ததைக் காட்டிலும் கூடுதல் இலாபம் உண்டு. எப்போதோ வாங்கிப்போட்ட இடம் பல மடங்கு விலை உயரும். வியாபாரத்தில் புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். இம்மாதம் வெள்ளிக் கிழமை தோறும் லட்சுமி வழிபாட்டை மேற்கொள்வதன் மூலம் செல்வ நிலை உயரும்.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் குரு பார்வை உள்ளதால் பணவரவு திருப்தி தரும். உறவினர்கள் பக்க பலமாக இருப்பர். கணவன் - மனைவிக்குள் அன்னியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளின் எதிர்காலக் கனவை நனவாக்குவீர்கள். உங்கள் பெயரிலேயே இடம், வீடு வாங்கும் யோகம் உண்டு. அத்தியாவசியப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். பணிபுரியும் பெண்களுக்கு கேட்ட சலுகைகள் கிடைக்கும். சம்பள உயர்வு எதிர்பார்த்த படியே வந்து சேரும்.

## நினைத்த காரியங்களை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள்!

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாழடைந்த கட்டடங்களை அகற்றுவதற்கு தீர்மானம்

## பூநகரி பிரதேச சபை தவிசாளர்

(அக்கராயன்)

கிளிநொச்சி பூநகரி பிரதேச சபையின் எல்லைப் பரப்பில் உள்ள பாழடைந்த அல்லது அபாயகரமாக துப்புரவு செய்ய ப்படாது உள்ள கட்டடங்களை அகற்றுவதற்கு தீர்மானிக்கப்ப ட்டுள்ளது. பூநகரி பிரதேச சபையின் அமர்வு நேற்று முன் தினம் தவிசாளர் சி.சிறிரஞ்சன் தலைமையில் நடைபெற்றது.

இவ் அமர்வில் பூநகரி பிர தேசசபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் பாழடைந்த அல்லது அபாயகரமாக துப்புரவு செய்யப்படாத நிலையில் உள்ள காணிகளால் பொது மக்கள் பல வகையான அசௌகரியங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.


பாவனையற்ற கட்டடங்களில் மதுபோதை பாவனை, சமூக சீர்கேடுகள் நடை பெற்று வருவதுடன் பயனற்ற கட்டடங்கள் இடிந்து விடும் நிலையில் உள்ளதனால் உயிர் ஆபத்துகள் ஏற்படுவதாகவும் உள்ளது.

எனவே பயனற்ற கட்டடங்களை முழுமையாக துப்புரவு செய்து பொது மக்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தாத வகையில் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டது.

2022. 07.19 ஆம் திகதி முதல் 14 நாட்களுக்குள் குறித்த கட்டடங்களை உரியவர்கள் அகற்றாவிட்டால் பிரதேச சபையினால் குறித்த கட்டடங்களை அகற்றுவத ற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என வும் தெரிவிக்கப்பட்டது.

(4-6-84-350)

# பாதுகாப்பு கடவை அமைப்பு



(நெளுக்குளம்)

வவுனியா செட்டிகுளம் துடரிகுளம் பகுதியில் அமைந்துள்ள பாதுகாப்பற்ற புகையிரதக்கடவைக்கு பாதுகாப்புக்கடவை அமைக்கப்பட்டு நேற்று முன் தினம் மக்கள் பாவனைக்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

வெங்கல செட்டிகுளம் பிரதேச சபையினால் இறம்பைக்குளம் ஈஹிமிஷனிடம் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக பாதுகாப்புக்கடவை அமைக்கப்பட்டுள்ளது.

துடரிகுளம் பகுதியில் பாதுகாப்பற்ற புகையிரத கடவையை கடக்க முற்பட்ட போது இருவரின் உயிர் காவு கொள்ளப்பட்டுள்ளது. இந்நிலையில் அப்பகுதிக்கு பாதுகாப்பான புகையிரதக்கடவை அமைத்து தருமாறு கோரி மக்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றினையும் அண்மையில் மேற்கொண்டனர்.

இந்நிலையில் குறித்த பாதுகாப்பான புகையிரதக் கடவை அமைக்கப்பட்டு மக்கள் பாவனைக்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

(4-6-299)

# நாட்டை சரியான திசையில் கொண்டு செல்லக்கூடியவர் ரணில்

## டக்ளஸ் தெரிவிப்பு



(கொழும்பு)

புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களுக்கு ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றது என்று கட்சியின் செயலாளர் நாயகமும், கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவித்திருப்பதாவது.

"இலங்கை அரசியல் நெருக்கடிகளையும் பொருளாதார நெருக்கடிகளையும் எதிர் கொண்டுள்ள நிலையில் நாட்டுக்கு தலைமை தாங்கி நாட்டை சரியான திசை வழியில் நடத்திச் செல்லக் கூடியவர், ரணில் விக்கிரமசிங்க தான் என்பதை நாம் நேர்மையாகவும் துணிச்சலோடும் அன்று கூறியிருந்தோம்.

தற்போது நாட்டு மக்கள் எதிர் கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிகளை எதிர் கொள்ள வேண்டிய கடமைப் பொறுப்பை செய்வதற்கு நாம் அனைவரும் கட்சி அரசியலுக்கு அப்பால் ஒருமித்து செயலாற்ற வேண்டிய காலகட்டத்தில் இருக்கின்றோம்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியானது பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை வெற்றி பெறச் செய்யும் வெற்றியாக அமையும். இந்நிலையில், எமக்கான ஆதரவினை எமது மக்கள் இன்னும் அதிகமாக வழங்குவார்களாயின், மேலும் பல விடயங்களை சாத்தியமானதாக்க எம்மால் முடியும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(4-6)



ஊடக மற்றும் தகவல் விளங்கறிவை மேம்படுத்தும் நோக்கிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் ஊடக மற்றும் தகவல் விளங்கறிவுக்கான மையமும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும் கைச்சாத்திட்டன. இந்த நிகழ்வு நேற்று முன்தினம் யாழ். பல்கலைக்கழக சபா மண்டபத்தில் இடம் பெற்றது. (படம்-சிவசாந்தன்)



நெல்லியடி நகரப்பகுதியில் அமைந்துள்ள முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் உப. சபாநாயகருமான சிவசிதம்பரத்தின் பிறந்தநாள் நினைவையொட்டி கரவெட்டி ஒன்றியத்தின் தலைவர் உபாலி பொன்னம்பலம் தலைமையில் அஞ்சலி நிகழ்வு நேற்று நடைபெற்றது.

(படம்- மகாலிங்கம்)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 140 | 180 | 250 |
| உருளைக்கிழங்கு | 240 | 230 | 220 | 220 |
| பச்சைமிளகாய் | 450 | 400 | 550 | 600 |
| தக்காளி | 200 | 220 | 280 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 300 | 350 | 300 | 200 |
| கோவா | 280 | 300 | 300 | 320 |
| கரட் | 250 | 330 | 380 | 400 |
| பூசணி | 160 | 350 | 200 | 250 |
| புடோல் | 160 | 140 | 120 | 200 |
| வாழைக்காய் | 100 | 100 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 280 | 300 | 400 | 400 |
| பெரிய வெங்காயம் | 240 | 230 | 240 | 240 |
| பாகற்காய் | 300 | 200 | 220 | 500 |
| வெண்டக்காய் | 160 | 120 | 80 | 300 |
| கருணைக் கிழங்கு | 160 | 200 | 200 | 240 |
| பயற்றங்காய் | 120 | 140 | 100 | 200 |
| லீக்ஸ் | 250 | 250 | 260 | 250 |
| பீற்றூட் | 250 | 300 | 270 | 320 |
| கறிமிளகாய் | 600 | 500 | 600 | 450 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 400 | 300 |
| போஞ்சி | 450 | 450 | 450 | 500 |
| கத்தரிதம்புள்ள | 180 | 100 | -- | 220 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 80 | 80 |
| தேசிக்காய் | 300 | 250 | 300 | 320 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 70 | 60 | 50-70 |
| இராசவள்ளி | 160 | 250 | 250 | 250 |
| வெங்காயப்பூ | 300 | 200 | 320 | 350 |
| முள்ளங்கி | 140 | 100 | 320 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 100 | 80 | 60 |
| வல்லாரை | 20 | 20 | 50 | 40 |
| ஈரப்பலா | 100 | 150 | 100 | 160 |



முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேசத்தில் இம்முறை சிறுபோக நெற்செய்கையினை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு யூரியா உரம் நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பாண்டியன்குளம் கமநல சேவைகள் நிலையத்தில் வைத்து வழங்கிவைக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

அம்புலிமாமா

## அண்ணன் வந்தான்!

இடி கரையில் பரமனும் புஷ்பாவும் புதிதாக மணமான தம்பதியர். புஷ்பா சற்று வசதியான குடும்பத்தில் பிறந்தவள். பெற்றோரின் ஒரே மகளாதலால் செல்லமாக வளர்ந்தவள்.

அவளைப் பார்த்து உறவினர்களெல்லாம் என் கண்ணு என் ராஜாத்தி என்று கொஞ்சி தின்பண்டங்களைக் கொடுத்து வந்தார்கள். அதனால் அவள் கொஞ்சம் அதிகமாகவே எதையும் சாப்பிடும் பழக்கத்தைக் கொண்டாள்.

கல்யாணமாவதற்கு முன் பரமன் தானே சமைத்துச் சாப்பிட்டு வந்தான். எனவே புஷ்பா குடித்தனம் செய்ய வந்ததும் அவன் எந்தப் பொருள் எங்கே வைக்கப்பட்டுள்ளது என்பதைக் கூறி இதோ பார் இந்த அரிசி டப்பாவில் ஆழாக்கு உள்ளது. அதனால் இரண்டு ஆழாக்கு அரிசி எடுத்து சாதம் சமைத்தால் நம் இருவருக்கும் போதும். நான் தனியாக இருந்தபோது ஒரு ஆழாக்கு அரிசிதான் போட்டேன் என்றான்.

புஷ்பாவும் ஒரு வாரத்திற்கு தன் கணவன் கூறியபடி சமைத்தாள். ஆனால் அவளுக்கு வயிறு நிறையச் சாப்பிடக் கிடைக்கவில்லை. அதனால் ஒரு நாளிரவு பரமன் நன்கு தூங்கிக் கொண்டிருந்தபோது புஷ்பா எழுந்து சமையறைக்குப் போய் பாயாசம் வைத்து சாப்பிட்டாள்.



அன்று முதல் தினமும் தன் கணவன் இரவில் தூங்கிய பின் புஷ்பா எழுந்து சமையலறைக்குப் போய்த் தனக்குப் பிடித்தமான உணவைத் தயாரித்து சாப்பிட்டு வந்தாள். ஒரு நாளிரவு அவள் சர்க்கரைப் பொங்கல் செய்து அதை ஒரு இலையில் கொட்டி சூடு ஆறட்டும் என நினைத்து பாத்திரங்களைக் கழுவ கொல்லைப்புற கிணற்றடிக்குச் சென்றாள். அவள் திரும்பி சமையலறைக்கு வந்தபோது அங்கு ஒரு ஆள் நின்று கொண்டிருப்பது கண்டு பயந்து போனாள்.

அவனும் நான் பக்காத் திருடன். கத்தினால் ஒரே குத்தில் உன்னைக் கொன்று விடுவேன் என்று மிரட்டினான். சமையலறையில் ஏதோ சத்தம் கேட்டதால் படுக்கையறையில் தூங்கிக் கொண்டிருந்த பரமன் விழித்துக் கொண்டு "புஷ்பா! அங்கே என் சத்தம்?" என்று கேட்டான்.

கணவன் விழித்து எழுந்தது கண்ட புஷ்பா தான் அவனுக்குத் தெரியாமல் உணவு தயாரித்து சாப்பிடுவது தெரிந்து விடுமே எனப் பயந்தாள்.

அதனால் அவள் திருடனிடம் என் கணவர் வரப் போகிறார். அவர் உன்னை அடித்து நொறுக்கி விடுவார். நீ சட்டென அந்த இலை முன் உட்கார்ந்து கொள் என்று கூறி ஒரு பலகையைப் போட்டு சர்க்ரைப் பொங்கல் வைக்கப்பட்ட இலை முன் உட்கார வைத்தாள்.

(தொடரும்...)

# சிலப்பதிகாரம்

## கோவலன் என் காவலன்

மன்னன் உலா வருவதுபோல மங்கல நாண் (தாலி) நகரெங்கும் ஊர்வலமாகச் சென்றது.

நிறைவாக மண்டபத்தை அடைந்தது. விதவிதமான பூக்களை வைத்து அலங்கரிக்கப்பட்டிருந்த அந்த மண்டபமே ஓர் அழகிய மலர்ச் சோலை மாதிரி காட்சியளித்தது.

மஞ்சள் பூக்களின் பின்னணியில் சிவப்புப் பூக்களால் மணமக்கள் பெயரைப் பெரிதாக எழுதி மண்டபத்தின் வாசலில் வைத்திருந்தார்கள்.

உள்ளே புகார் நகரம் மட்டுமல்லாது, மூவேந்தர்களின் ராஜ்ஜியத்திலிருந்தும் மக்கள் திரண்டிருந்தார்கள்.




சோழ நாட்டின் முன்னணி இசைக் கலைஞர்கள் மங்கல இசை வாசித்துக் கொண்டிருந்தார்கள். மணமேடையில், நீலப் பட்டுக் கூரை, அதனடியில் முத்து மண்டபம் வேத நெறிப்படி அந்தணர்கள் சடங்குகளை ஆற்றிக் கொண்டிருந்தார்கள். மந்திர கோஷமும் மங்கல இசையும் பின்னணியாக இருக்க, கண்ணகியும் கோவலனும் கைப்பிடித்து அக்கினியை வலம் வந்தனர்.

வெட்கத்தில் குனிந்திருக்க வேண்டிய கண்ணகியின் தலை, பார்த்தீர்களா என் கணவனை? என்கிற பெருமிதத்தில் நிமிர்ந்திருந்தது

பார்க்கப் பரவசமான காட்சி.

அதைப் பார்த்த மூத்தவர்கள் ராமனையும் சீதையையும் பார்ப்பதாக உணர்ந்து சிலிர்த்தார்கள். இளைஞர்கள் அவர்களை ரதி மன்மதனாகப் பார்த்தார்கள்.

மாநாய்கனும் அவர் மனைவியும் சந்தோசத்தில் நெகிழ்ந்தார்கள். கோவலனின் பெற்றோர் பெருமிதத்தில் மகிழ்ந்தார்கள்.

கோவலன், கண்ணகியை எந்தத் தீமையும் அண்டாமல் இனிதே நெடுங்காலம் அவர்கள் வாழ வேண்டும் என்று வாழ்த்துகள் குவிந்தன.

பெரியோரும் பழுத்த சுமங்கலிகளும் மலர் தூவி வாழ்த்தினார்கள்.

இப்போது கண்ணகியின் மனத்தில் கொஞ்சம் பயம் நிறைய வெட்கம் சூழ்ந்துகொண்டது.

மணமான அவளது தோழிகள் இலை மறைகாயாக அறிவுறுத்தியிருந்த அடுத்த [illegible] பற்றிய கற்பனைக் கலக்கம்தான்!

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டலஸுக்கு வாக்களிப்பதாக பகிரங்கமாக கூறியவர்கள் அவரை ஏமாற்றிவிட்டனர்

## வாசுதேவ நாணயக்கார

(கொழும்பு)

டலஸ் அழகப்பெரும்வுக்கு வாக்களிப்பதாக பகிரங்கமாகக் கூறியவர்கள் கூட அதனை செய்யவில்லை என்பதை காணக்கூடியதாக இருப்பதாகவும் அவர்கள் ஏமாற்றினார்களோ என்ற சந்தேகம் இருப்பதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்திற்கு வெளியில் நேற்று செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

நாங்கள் தோல்வியடைந்து விட்டோம். நாங்கள் எதிர்பார்த்த வாக்குகள் கிடைக்கவில்லை. ஏமாற்றப்பட்டோமோ என்ற சந்தேகம் எனக்கு இருக்கின்றது. இதற்கான காரணத்தை அவர்களிடமே கேட்க வேண்டும். எனினும் அப்படியான குற்றச்சாட்டையும் முன்வைக்க முடியாது.

எவ்வாறாயினும் இனி வரும் காலங்களில் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு அரசியலில் ஈடுபடுவேன்.

எமது அணியிலுள்ள 10 கட்சிகள் கொள்கை அடிப்படையிலான அரசியலை முன்னெடுக்கும்.

எமது அணியில் இருக்கும் அதாவுல்லா ரணிலுக்கு வாக்களிப்பதாகக் கூறி. வாக்கை அளித்தார்.

எமக்கு வாக்களிப்பதாக வெளிப்படையாக கூறியவர்களில் பெரும்பாலானோர் எமக்கு வாக்களிக்கவில்லை.

எவ்வாறாயினும் சஜித் பிரேமதாசவின் எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கும் பிரச்சினை ஏற்பட வாய்ப்புள்ளது எனவும் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார். (ம-7)

---

## துணிச்சலாக நேர்வழியில் வாழ்ந்தால், பிரச்சினைகளும் கவலைகளும் மட்டுமல்ல எதிரிகளும் அமைதியாகி விடுவார்கள்.

– நேருஜி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அறம் காக்கும் சபை மௌனமாக நின்றால்...

துரியோதனனின் கட்டளைப்படி பாண்டவர் மனையாள் பாஞ்சாலி கௌரவர் சபைக்கு அழைத்து வரப்படுகிறாள்.

அந்தோ! மாடு நிகர்த்த துச்சாதனன் அவள் மைகுழல் பற்றி இழுக்கிறான்.

வீஷ்மர், துரோணர் உள்ளிட்ட தர்மவான்கள் அறம் மறந்து மௌனம் காக்கின்றனர்.

அதன் விளைவுதான் 18 நாள் நடைபெற்ற குருசேத்திரப் போர்.

சபை நடுவில் பாஞ்சாலி மானபங்கப்படுத்தப்பட்டபோது, பிதாமகராகிய வீஷ்மர் அறத்தை எடுத்துரைக்க வக்கின்றி மௌனமாக இருந்ததனால் அவரே போர்க்களத்தில் பலியான முதல் படைத் தளபதியானார்.

ஆக, தர்மத்தைப் பாதுகாக்க வேண்டிய சபைகளில் அறத்தை வலியுறுத்துவது அச்சபையின் கண் இருப்பவர்களின் தலையாய கடமையாகும்.

ஆனால் இன்றைய காலச் சூழல்கள் தர்மத்துக்காகக் குரல் கொடுப்பதை மறந்து பொய்யும் புரட்டும் பணத்துக்கு விலை போகின்ற பாங்கும் உச்சியில் நின்று ஆடுகிறது.

ஆம் இலங்கைப் பாராளுமன்றத்தில் நேற்றைய தினம் (20) ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பு இடம்பெற்றது.

இலங்கைப் பாராளுமன்றம் அறம்காக்கும் சபையாக இருந்திருந்தால், ஜனநாயகத்தை நிலைநாட்டும் அவையாக இருந்தால் ஜனாதிபதித் தெரிவின்போது பாராளுமன்ற உறுப்பினர்கள் பகிரங்கமாகத் தமது வாக்குகளை வழங்கியிருக்க வேண்டும்.

ஆனால் அவர்கள் அதைச் செய்யத் துணியவும் இல்லை. அதைச் செயற்படுத்த எவரும் தூண்டவும் இல்லை.

அப்படியானால் இரகசிய வாக்கெடுப்பினூடு அறம் மீறப்பட்டுள்ளது.

அதிகூடிய பணம் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது.

இதற்கும் மேலாக, வழங்கிய வாக்குறுதிகளும் மீறப்பட்டுள்ளன என்பது நிறுதிட்டமான உண்மையாகிறது.

ஆம், டலஸ் அழகப்பெருமவுக்கு வாக்களிப்பதாக வாக்குறுதி வழங்கிய பாராளுமன்ற உறுப்பினர்கள் அவரை ஏமாற்றி விட்டனர் எனும்போது,

இத்தகையவர்களால் நாட்டை நன்னிலைப்படுத்த முடியுமா என்ன? இதை நாம் கூறும் போது டலஸ் அழகப்பெருமவின் பக்கம் சார்வதாக யாரும் நினைத்துவிடாதீர்கள்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் என்றால், அவர்கள் தமது கருத்தை – நிலைப்பாட்டைத் துணிந்து கூறவேண்டும்.

அவர்கள் தாம் விரும்பியவருக்கு வாக்களிக்கலாம். அது அவர்களின் உரிமை. அதை மறைக்க வேண்டிய தேவையில்லை என்பதுதான் நம் கருத்து.

எதுவாயினும் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சஜித் தோற்று கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக வந்ததனால்தானே தர்மம் வெல்லும் என்பது நிலைநாட்டப்பட்டது.

ஆக, டலஸ் தோற்று ரணில் வென்றதால் ஆவது என்னவென்று ஆருடம் கூறாமல் அமைதியாக இருந்து நடப்பதைப் பார்க்கலாம்.

---

## பண்டாரநாயக்க சிலை அமைந்துள்ள பகுதிக்குள் பிரவேசிப்பதற்கு நீதிமன்றம் தடை

காலி முகத்திடலில் பண்டாரநாயக்க சிலை அமைந்துள்ள இடத்தில் இருந்து 50 மீற்றர் பகுதிக்குள் எந்தவொரு தரப்பினரும் பிரவேசிக்கக் கூடாது என கொழும்பு கோட்டை நீதவான் திலின கமகே உத்தரவு பிறப்பித்துள்ளார்.

குறித்த சிலையை சேதப்படுத்தும் திட்டம் இருப்பதாக தமக்கு தகவல் கிடைத்துள்ளதாக கோட்டை பொலிஸார் வழங்கிய தகவலின் அடிப்படையில் அவர்களின் கோரிக்கையை பரிசீலித்த நீதவான் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

எனவே சிலை அமைந்துள்ள இடத்திலிருந்து 50 மீற்றர் பகுதிக்குள் எந்தவொரு தரப்பினரும் நுழைய முடியாதவாறு உத்தரவு பிறப்பிக்குமாறு பொலிஸார் நீதிமன்றில் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-7)

---

## ஜனாதிபதியாக ரணில் பதவியேற்றவுடன் செயலிழக்கும் அமைச்சரவை

பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட நிலையில், புதிய பிரதமரையும் புதிய அமைச்சரவையையும் தெரிவு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்டத்துறை பேராசிரியர் அ.சர்வேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வாக்குகள் அளிக்கப்பட்ட விதத்தை வைத்து பார்க்கும் போது, கட்சிகளுக்குள் பிளவுகள் ஏற்பட்டுள்ளது. கட்சித் தலைமைகள் தீர்மானித்ததன் அடிப்படையில்தான் வாக்களித்துள்ளனரா என்று கூற முடியாது.

குறிப்பாக மொட்டுக் கட்சியினை பொறுத்தவரை இன்னமும் ராஜபக்ஷவினரின் கட்டுப்பாடு இழக்கப்படவில்லை.

மொட்டுக் கட்சியில் இருந்து கணிசமான வாக்குகள் ரணிலுக்கு சென்றதனால்தான் அவரினால் வெற்றி பெற முடிந்தது.

அவ்வாறு கணிசமான வாக்குகள் மொட்டுக் கட்சியில் இருந்து சென்றிருந்தால் அதற்கு முக்கியமான காரணம் மகிந்த ராஜபக்ஷ மற்றும் ராஜபக்ஷ குடும்பத்தினருடைய கட்டுப்பாடு இன்னமும் அந்த கட்சியில் இருக்கின்றது என்றுதான் நாம் அனுமானிக்க வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (ம-7)

---

## மஹாசபைக் கூட்டம்

கொக்குவில் மஞ்சவணப்பதி முருகன் ஆலய தர்மகர்த்தா சபையின் புதிய உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான மஹாசபைக் கூட்டம் எதிர்வரும் 24.07.2022 ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணிக்கு ஆலய கல்யாண மண்டபத்தில் நடைபெற இருப்பதால் சகல மஹாசபை அங்கத்தவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (ம-7)

---

## ரணில் வீட்டுக்கு தீ வைத்த 4 பேருக்கு மறியல்

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வீட்டிற்கு தீ வைத்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட 4 பேரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் நேற்றைய தினம் கொழும்பு கோட்டை நீதவான் திலின கமகே முன்னிலையில் பிரசன்னப்படுத்தப்பட்டனர்.

இதன்போது, அவர்களை எதிர்வரும் 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். (ம-7)

---

## சத்திய தரிசனம்



### அவதாரம்

**அவதார புருஷர் என்பவர் யார்?**

- ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் கீழ்க்கண்ட பண்புகளை விளக்கியிருக்கிறார்.
- அவதார புருஷர் என்பவர் உலகத்தில் ஒரு பெரும் மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய ஆற்றல் உடையவர். அவரை ரிஷிகள் கலங்கரை விளக்கம் போல வழிகாட்டிகளாக விளங்குகிறார்கள். அவதார புருஷர்கள் நாம் சம்சாரப் பெருங் கடலை கடப்பதற்குரிய பெரிய தோணிகளைப் போன்றவர்கள்.
- அவதார புருஷர்களின் சக்தியும் ஆற்றலும் அளத்தற்கரியது. மக்களை இந்த யுகத்தில் மட்டு மல்லாது பல யுகங்கள் கடந்த பிறகும் சரியான பாதையில் செல்வதற்கு வழிகாட்டிகளாக இருக்கின்ற ஆற்றல் அவர்களுக்குண்டு.
- தங்களது பூத உடலை நீத்த பிறகும் மனித குலத்தைக் காக்கக்கூடிய ஆற்றல் அவர்களுக்குண்டு.
- காலம் அவர்களது காலடியில் அடிமையாக அவர்களது கட்டளைக்காகக் காத்திருக்கின்றது.சாதாரண மனிதர்கள் இவ்வுலகை விட்டு நீங்கிய பிறகு அவர்களது செல்வாக்கு குறையத் தொடங்குகிறது. ஆனால் அவதார புருஷரின் பெருமை அவரது ஸ்தூல உடல் மறைந்ததும் குறைவதில்லை. மாறாக அதிகரிக்கின்றன. காலத்தின் சக்திக்குட்பட்ட மனிதர்கள் தான் பெருமைக்குப் பங்கம் ஏற்படுவதையும் அனுபவிக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போர்களின் பூமி உக்ரைன் அதன் வரலாற்றுப் பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 34

"உக்ரைனின் சுதந்திரப் பிரகடனச் சட்டத்தை நீங்கள் ஆதரிக்கிறீர்களா?" என்ற கேள்விக்கு "ஆம்" என்று வாக்களித்த சதவீதம் (மாநில ரீதியாக)

| மேற்கு உக்ரைன் மாநிலங்கள் | % | மத்திய உக்ரைன் மாநிலங்கள் | % |
|---|---|---|---|
| வாலின் | 96.3 | சைதோமிர் | 95.1 |
| ரைவன் | 96.0 | கீவ் | 95.5 |
| க்மெள்னிட்சிகி | 96.3 | செர்னிஹிவ் | 93.7 |
| தெர்னாபில் | 98.7 | சுமி | 92.6 |
| லிவிவ் | 97.5 | போல்தாவா | 94.9 |
| சாகர்பாசியா | 92.6 | செர்கசி | 96.0 |
| ஐவனோ-பிரான்கிவிஸ்க் | 98.4 | வின்னிதிசியா | 95.4 |
| செர்னியிவ் | 92.8 | கீரோவராத் | |
| **கிழக்கு உக்ரைன் மாநிலங்கள்** | | **தெற்கு உக்ரைன் மாநிலங்கள்** | |
| கார்கிவ் | 86.3 | தினிபிராபிட்ரோவஸ்க் | 90.4 |
| லுகன்ஸ்க் | 83.9 | ஒடேசா | 85.4 |
| தோனேஸ்க் | 83.9 | மைகோலைவ் | 89.5 |
| கிரிமியா குடியரசு | 54.2 | கேர்சன் | 90.1 |
| செவாஸ்டோபோல் நகரம் | 57.1 | சாப்ரோசியா | 90.7 |
| கீவ் நகரம் | 92.9 | | |

மேலும் அது தனிநாடாகப் பிரிந்தது. கோர்பச்சேவ் சோவியத் யூனியனை ஒன்றாக் வைத்திருப்பதற்கான எந்தவொரு யதார்த்தமான வாய்ப்பையும் முடிவுக்குக் கொண்டு வந்தது. டிசெம்பர் 1991 அனைத்து முன்னாள் சோவியத் குடியரசுகளும் யூனியனில் இருந்து முறையாக பிரிந்து விட்டன. தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு வாரத்திற்குப் பிறகு, க்ராவ்சுக் யெல்ட்சின் மற்றும் பெலாரஷ்யத் தலைவர் ஸ்டானிஸ்லாவ் ஷ்கேவிச் ஆகியோ ருடன் இணைந்து பெலவேஷா உடன் படிக்கையில் கையெழுத்திட் டார். இது சோவியத் யூனியன் இல்லாமல் போய்விட்டதாக அறிவித்தது. சோவியத் யூனியன் அதிகாரபூர்வமாக டிசெம்பர் 26 அன்று கலைக்கப்பட்டது.

### சோசியத் யூனியன் கலைக்கப்பட்டது பற்றி...

1991 டிசெம்பர் 25 இல் சோவியத் யூனியன் 15 நாடுகளாக பிரிந்தது. சோவியத் யூனியனில் அங்கம் வகித்த ஆர்மீனியா, அஜர்பைஜான், பெலாரஸ், எஸ்டோனியா, ஜோர்ஜியா, கஜகஸ்தான், கிர்கிஸ்தான், லாட்வியா, லிதுவேனியா, மால்டோவா, ரஷ்யா, தஜிகிஸ்தான், துர்க்மெனிஸ்தான், உக்ரைன், உஸ்பெகிஸ்தான் ஆகியவை தனி நாடுகளாகின. 2 ஆம் உலகப் போர் சந்தர்ப்பத்தில் உலகில் வல்லரசு நாடுகளாக அமெரிக்கா, சோவியத் யூனியன்கள் (ஒருங்கிணைந்த ரஷ்யா) விளங்கிய நிலையில் நாடுகள் பிரிவால் இது மாறிப்போனது. அமெரிக்கா மட்டுமே உலகில் பலம் வாய்ந்த நாடாக மாறியது.

சோவியத் ஒன்றியம் 1991 இல் கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து, உக்ரைன் தனிநாடாக விடுதலை அடைந்தது. பல தலைமுறைகளுக்கு முன்பாக அவர்கள் விரும்பிய விடுதலை கிடைத்தது. சோவியத் யூனியனிலிருந்து 7 இலட்சத்து 80 ஆயிரம் படைவீரர்கள் கொண்ட இராணுவமும் அணு ஆயுதங்களும் உக்ரைனுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டது. உக்ரைன், உலகிலேயே அதிக




அணு ஆயுதங்கள் கொண்ட மூன்றாவது வல்லரசாக மாறியது. அணு ஆயுதங்களை வைத்திருக்க விரும்பாத உக்ரைன் எல்லா அணு ஆயுதங்களையும் அழிப்பதற்காக ரஷ்யாவிடம் கொடுத்து, நான்கே ஆண்டுகளில் அணு ஆயுதமே இல்லாத தேசமாகி விட்டது. உக்ரைன் மக்கள் தொகையில் அண்ணளவாக ஐந்து பேரில் ஒருவர் ரஷ்ய இனத்தவர். நாட்டில் பெரும்பாலானவர்களுக்கு ரஷ்ய மொழி பேசத் தெரியும்.

உக்ரைன் சோவியத் யூனியனிலிருந்து பிரிந்தபோது 7 இலட்சத்து 80 ஆயிரம் படைவீரர்கள் கொண்ட இராணுவமும் அணு ஆயுதங்களும் உக்ரைனுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டன. உக்ரைன், உலகிலேயே அதிக அணு ஆயுதங்கள் கொண்ட மூன்றாவது வல்லரசாக மாறியுது.

**அணு ஆயுதங்களை வைத்திருக்க விரும்பாத உக்ரைன் எல்லா அணு ஆயுதங்களையும் அழிப்பதற்காக ரஷ்யாவிடம் கொடுத்து, 1995 ஆம் ஆண்ட ளவில் அணு ஆயுதமே இல் லாத தேசமாகி விட்டது.**

ரஷ்யாவை ஒட்டிய கிழக்கு உக்ரைன் மக்கள் ரஷ்யாவை நேசிப்பார்கள்; மேற்கு உக்ரைனில் ரஷ்யாவை வெறுப்பார்கள். அதனால் ஒருபுறம் ரஷ்யாவுடன் இணக்கமாக இருந்தபடி, இன்னொரு பக்கம் ஐரோப்பிய யூனியனுடன் உறவாடி வந்தது உக்ரைன்.

**உக்ரைன் சோவியத் யூனியனிலிருந்து பிரிந்தபோது 7 இலட்சத்து 80 ஆயிரம் படைவீரர்கள் கொண்ட இராணுவமும், அணு ஆயுதங்களும் உக்ரைனுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டன. உக்ரைன், உலகிலேயே அதிக அணு ஆயுதங்கள் கொண்ட மூன்றாவது வல்லரசாக மாறியது.**

**ரஷ்யாவை ஒட்டிய கிழக்கு உக்ரைன் மக்கள் ரஷ்யாவை நேசிப்பார்கள்; மேற்கு உக்ரைனில் ரஷ்யாவை வெறுப்பார்கள். அதனால் ஒருபுறம் ரஷ்யாவுடன் இணக்கமாக இருந்தபடி, இன்னொரு பக்கம் ஐரோப்பிய யூனியனுடன் உறவாடி வந்தது உக்ரைன்.**

சோவியத் ஒன்றியத்தின் கலைப்பின் போது, ரஷ்யாவின் மக்கள் தொகை சோவியத் ஒன்றிய மக்கள் தொகையின் அரைப்பங்காக இருந்த போதிலும் ரஷ்யா சோவியத் ஒன்றியத்தின் வெளிக்கடன்களைத் திருப்பிச் செலுத்தும் முழுப் பொறுப்பையும் ரஷ்யா தானே ஏற்றுக்கொண்டது.

அதன் காரணமாக ரஷ்யாவுக்கு உயர் பாதீட்டுப் பற்றாக்குறை காரணமாக 1998 இல் நிதி நெருக்கடி ஏற்பட்டது.

இதனால் ரஷ்யாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி மேலும் வீழ்ச்சியடைந்தது.

### 1991 உக்ரைனிய ஜனாதிபதித் தேர்தல்

உக்ரைனில் 1 டிசெம்பர் 1991 அன்று ஜனாதிபதித் தேர்தல்கள் நடத்தப்பட்டன. இது உக்ரைன் நாட்டின் வரலாற்றில் முதல் நேரடி ஜனாதிபதித் தேர்தல் ஆகும். வெர்கோவ்னா ராடாவின் தலைவரும் செயல் தலைவருமான லியோனிட் க்ராவ்சுக், சுயேட்சை வேட்பாளராகப் போட்டியிட்டு 61.6% வாக்குகளைப் பெற்றுத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அதே நாளில் நடத்தப்பட்ட சுதந்திர வாக்கெடுப்பில் 92 சதவீத வாக்காளர்கள் சோவியத் யூனியனில் இருந்து பிரிவதற்கு வாக்களித்தனர். ஆறு ஜனாதிபதி வேட்பாளர்களும் சுதந்திரத்தை ஆதரித்தனர் மற்றும் வாக்கெடுப்பில் "ஆம்" என்று வாக்களிக்க பிரசாரம் செய்தனர்.

தேர்தலில் 6 வேட்பாளர்கள் போட்டியிட்டார்கள். சுயேட்சையாக போட்டியிட்ட லியோனிட் க்ராவ்சுக் 19,643,481 வாக்குகளும் இரண்டாவது இடத்தைப் பெற்ற உக்ரைனின் மக்கள் இயக்க வேட்பாளர் வியாசெஸ்லாவ் சோர்னோவில் 7,420,727 23.3 வாக்குகளும் பெற்றனர். பதிவு செய்யப்பட்ட வாக்காளர்கள் 37,885,555 பேர். வாக்களித்தோர் 31,891,742 பேர்.

இத் தேர்தலில் லியோனிட் க்ராவ்சுக் 24 மாநிலங்களில் . 21 இல் அதிகப்படியான வாக்குகளைப்பெற்று வெற்றி பெற்றார். மற்றைய மூன்று மேற்கு மாகாணங்களான தெர்னாபில், லிவிவ் மற்றும் ஐவனோ-பிரான்கிவிஸ்க் ஆகியவற்றில் வியாசெஸ்லாவ் சோர்னோவில் அதிகப்படியான வாக்குகளைப்பெற்று வெற்றி பெற்றார். தெர்னாபில் மாநிலத்தில் லியோனிட் க்ராவ்சுக் மூன்றாம் இடத்திற்கு தள்ளப்பட்டிருந்தார்.

### ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட லியோனிட் க்ராவ்சுக் பற்றி...

லியோனிட் மகரோவிச் க்ராவ்சுக் 1934 ஆம் ஆண்டில் உக்ரைனிய விவசாய குடும்பத்தில் பிறந்தார். க்ராவ்சுக் 1958 இல் உக்ரைன் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்தார்.

அவர் 1989 இல் உக்ரைனிய கம்யூனிஸ்ட் கட்சி பணியகத்தில் உறுப்பினரானார். மேலும் 23 ஜூலை 1990 இல், சோவியத் உக்ரைனிய தலைவரானார் (பிரதமர்) . ஒக்டோபர் 24, 1990 இல், உக்ரைன் கம்யூனிஸ்ட் கட்சியின் அதிகாரத்தில் ஏகபோகம் ஒழிக்கப்பட்டது. அவர் தொடர்ந்து தலைவராக இருந்தார்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதியவர்...

பட்ட பருத்தித்துறை வீதிப் பகுதியில் அமைந்துள்ள காணி ஒன்றில் இருந்து நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை முதியவர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கொடிகாமம் காளி கோவிலடியைச் சேர்ந்த 69 வயதான நபரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,30)

## ஹெரோயின்...

யாழ்ப்பாணம் கொழும்புத்துறையில் நேற்று மாலை இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது .

நண்பர்களுடன் இணைந்து ஹெரோயின் போதை மருந்தை ஊசி மூலம் செலுத்திய இளைஞன், சில நிமிடங்களில் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் இளைஞனின் சடலம் ஒப்படைக்கப்பட்ட நிலையில் பெறப்பட்ட சலம் மாதிரியில் போதைப்பொருள் நேர்மறை அறிக்கை கிடைத்துள்ளது.

இளைஞனின் சடலம் இன்று உடற்கூற்றுப் பரிசோதனையின் பின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது .

யாழ்ப்பாணத்தில் அண்மைய காலப் பகுதியில் போதைப்பொருள் பாவனையினால் தொடர்ச்சியாக உயிரிழப்புகள் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7,33)

## யாழில் இன்று...

எடுக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் யாழ்.மாவட்ட செயலகத்தால் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தேசிய எரிபொருள் விநியோக திட்டத்திற்கமைய யாழ்ப்பாண மாவட்டத்தில் இன்று முதல்கட்டமாக குறிப்பிட்ட எரிபொருள் நிலையங்களில் பெற்றோல் மற்றும் டீசல் விநியோகம் பின்வரும் அடிப்படையில் விநியோகிக்கப்படவுள்ளது.

1.பெற்றோல் விநியோகம்

- மோட்டார் சைக்கிள் - ரூபா 1500
- முச்சக்கரவண்டி - ரூபா 2000
- கார்/வான் ரூபா - 7000

பெற்றோல் விநியோகத்தின்போது வாகன பதிவு இலக்கத்தின் அடிப்படையில் கீழ்வருமாறு விநியோகம் மேற்கொள்ளப்படும்.

- செவ்வாய், சனி - 0,1, 2
- வியாழன், ஞாயிறு - 3, 4, 5
- திங்கள் புதன் வெள்ளி - 6, 7, 8, 9

இதற்கு மேலதிகமாக QR code முழுமையாக அமுல்படுத்தப்படும் வரையில் எரிபொருள் விநியோக அட்டையில் பதிவுகள் மேற்கொள்ளப்படும். எரிபொருள் விநியோக அட்டையில் குறிப்பிடப்பட்ட எரிபொருள் நிலையத்திற்கு மேலதிகமாக ஏதேனும் எரிபொருள் நிலையங்களில் அவ் அட்டையைப் பயன்படுத்தி பெற்றோலை பெற்றுக்கொள்ள முடியும்.

2. டீசல் விநியோகம்

மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பிரதேச செயலாளரின் மேற்பார்வையில் விநியோகிக்கப்படும்.

யாழ்ப்பாண பலநோக்கு கூட்டுறவு சங்க எரிபொருள் விற்பனை நிலையம் அத்தியாவசிய தேவைக்கென ஒதுக்கப்பட்டுள்ளது. இதன்காரணமாக பொதுமக்கள் இவ் எரிபொருள் நிலையம் தவிர்ந்த ஏனைய எரிபொருள் நிலையங்களிலிருந்து எரிபொருளை பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

மேலும் தனியார் போக்குவரத்தில் ஈடுபடும் பேருந்துகளுக்கும் பாடசாலை சேவையில் ஈடுபடும் வாகனங்களுக்கும் மறு அறிவித்தல் வரை இலங்கைபோக்குவரத்துசபை ஊடாகவே தொடர்ந்து வழமைபோன்று டீசல் விநியோகம் மேற்கொள்ளப்படும். பொதுமக்கள் வரிசையில் காத்திராது ஊடகங்களில் வெளியிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை பின்பற்றி எரிபொருளை பெற்றுக் கொள்ளுமாறும் விநியோக நடவடிக்கைகள் தொடர்பாக மேலான ஒத்துழைப்பை வழங்கு மாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,18,33)

## கூட்டமைப்பின்...

கிரமசிங்கவுக்கு கிடைத்துள்ளன என ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி வாக்கெடுப்புத் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி பதவிக்கு தெரிவானதுடன் நாட்டுக்குள் புதிய எதிர்பார்ப்பு உருவாகும்.

இலங்கையில் புதிய எதிர்பார்ப்பு ஏற்படும் என எண்ணுகிறேன். நாட்டுக்கு தற்போது அனுபவமுள்ள தலைவர் இருக்கின்றார். அனுபவமுள்ள தலைவர் மூலம் நாட்டின் பிரச்சினை களைத் தீர்க்க முடியும் என எதிர்பார்க்கின்றேன்.

நாட்டுக்கு புதிய எதிர்பார்ப்பும் நம்பிக்கையும் ஏற்பட்டுள்ளது. ரணில் விக்கிரமசிங்கவை கைவிட்டு நாங்களும் சென்றோம், மீண்டும் அவரிடம் செல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இது தான் விதி என்பது என்றார். (ம-7)

## இலங்கையுட...

நேரங்களுக்கு முன்னர் அவர் இந்த் கருத்தை வெளியிட்டுள்ளார்.

டோக்கியோவில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய அவர், இலங்கையில் உள்ள மக்களின் நல் வாழ்வில் தமது நிதியம் மிகவும் ஆழ்ந்த அக்கறை கொண்டுள்ளது என்று கூறினார்.

இலங்கை, எரிபொருள் உணவு மற்றும் பிற அத்தியாவசியப் பொருட்களின் கடுமையான பற்றாக்குறையை எதிர்நோக்கியுள்ளதாகவும் கிறிஸ்டலினா ஜோர்ஜீவா குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## புதிய...

யாற்ற வேண்டும். என முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பு பாராளுமன்றத்தில் இடம்பெற்ற பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

புதிய அரசாங்கத்தில் பங்கேற்பீர்களா என ஊடகவியலாளர்கள் முன்னாள் பிரதமரிடம் கேட்டனர்.

அதற்குப் பதிலளித்த அவர், கட்சி இதுவரையில் அவ்வாறானதொரு தீர்மானத்தை கொண்டு வரவில்லை எனவும் கட்சி எடுக்கும் எந்தவொரு தீர்மானத்திற்கும் உடன்படுவதாகவும் தெரிவித்தார்.

அவ்வாறு அமையப் பெறும் புதிய அரசாங்கத்தின் செயற்பாடுகளை உன்னிப்பாக கவனிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

புதிய ஜனாதிபதி தேர்தலில் தமது கட்சியால் முன்வைக்கப்பட்ட வேட்பாளர் தோற்கடிக்கப்பட்டதாகவும் அவர் இங்கு குறிப்பிட்டார்.

காலிமுகத்திடல் போராட்டம் குறித்து இதன்போது கேள்வியெழுப்பப்பட்டது.

தற்போது போராடியதுபோதும், என தாம் நினைப்பதாகவும் முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ அங்கு குறிப்பிட்டார். (ம-7)

## இது தோல்வி...

மான வழிகாட்டலாக எடுத்துக்கொள்வதாக பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

நடைமுறையில் முதல் சர்வகட்சி அரசாங்கத்தை கட்டியெழுப்புவதற்காக தான் ஜனாதிபதி வேட்பாளராக முன் வந்ததாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மக்களின் இறைமைக்கு துரோகம் இழைத்து சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து அனுபவித்து வரும் மோசடியான அரசியல் கலாசாரத்திற்கு முடிவு கட்ட வேண்டும் என்ற எண்ணத்தில் தான் ஜனாதிபதி வேட்பாளராக முன் வந்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி வேட்பாளராக தம்மைப் பரிந்துரைத்த எதிர்க்கட்சித் தலைவருக்கும் தமக்காக தம்மை அர்ப்பணித்தவர்களுக்கும் அவர் தனது நன்றிகளைத் தெரிவித்தார். (ம-7)

மஹஜன சம்பத
திகதி 2022/07/20
சீட்டிழுப்பு இலக்கம் 4822
B 1 2 5 6 0 3

தன நிதானய
திகதி -2022.07.20
சீட்டிழுப்பு இலக்கம் - 852
K 23 28 46 62

HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2022.07.20
சீட்டிழுப்பு இலக்கம் 131
மேஷம் 04 13 35 40 மேஷம்

மெகா பவர்
திகதி 20/07/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1170
T 07 28 40 47 56

கொவிசெத
திகதி 2022.07.20
சீட்டிழுப்பு இலக்கம் 3064
B 49 51 61 74

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 20/07/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1300
கடகம் 8 2 0 9 7 6

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1797
நிறம் செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2022.07.20
தினம் புதன்கிழமை
G 04 28 35 52
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 1,927,600/-

சனிதா
புதன்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.07.20
சீட்டிழுப்பு இல : 3958
ரூ. 2,710,020/-
வெற்றி இலக்கங்கள் 04 24 53 74 R

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 3,790,180/-
திகதி 2022-07-20
வெற்றி வாரம் 3509
வர்ணம் பச்சை
15 16 32 42
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 5,630,060/-

24
W 06 25 35 59 74
சீட்டிழுப்பு வாரம் 973
பச்சை
2022.07.20 புதன்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 248,742,913/-
தொலை பேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk

ஜயோதா
சீட்டிழுப்பு வாரம் 1837
சீட்டிழுப்பு திகதி 2022-07-20
வெற்றி இலக்கங்கள் 31 35 69 70 D
ஜக்பொட் ரூ. 34,079,988/-
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
புதன்கிழமை
சீட்டிழுப்பு இல : 1623
சீட்டிழுப்பு திகதி : 2022.07.20
ரூ. 2,530,960/-
05 26 63 69 R

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து 14 பேர் ரணிலுக்கு வாக்கு

## அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து 14 பேர் ரணிலுக்கு வாக்களித்துள்ளதாக அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி வாக்கெடுப்பு நிறைவடைந்த பின்னர் பாராளுமன்ற வளாகத்தில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.


இதுதொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

ரணில் விக்கிரமசிங்கவின் தைரியத்தில் எழுதப்பட்டதே தற்போது இடம்பெற்றிருக்கின்றது. என்றாலும் இந்த விடயம் பெரும் சவாலுக்கு உரியதாகும். இலங்கை மக்களுக்கு இதன்மூலம் பெரிய எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற முடியும் என்று நினைக்கின்றோம். முழு பாராளுமன்றத்தையும் அரசாங்கமாக முன்னெடுத்துச் செல்லவே எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இதன்போது எங்களுக்கு பதவிகள் அவசியமில்லை. சரியாக இதனை செய்வார்கள் என்று நினைக்கின்றோம்.

இதற்கு சஜித் பிரேமதாச உள்ளிட்டோரை இணைத்துக்கொண்டு பயணிக்கலாம். தற்போது அனுபவம் உள்ள தலைவர் ஒருவர் கிடைத்துள்ளார். அவர் ஊடாக தேவையானவற்றை செய்யலாம் என்று நம்புகின்றோம். சர்வகட்சி அரசாங்கம் அமைப்பதே ரணில் விக்கிரமசிங்கவின் நோக்கம். அதற்காகவே அவர் பிரதான எதிர்க்கட்சி உட்படட அனைத்து கட்சிகளுக்கும் அழைப்பு விடுத்தார். குறிப்பாக ஐக்கிய மக்கள் சக்திக்கு அழைப்பு விடுத்தார்.

அதனால் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தற்போது நாடு தொடர்பில் சிந்தித்து செயற்பாடுவாரா அல்லது எதிர்காலத்தில் வரக்கூடிய தேர்தல் தொடர்பில் செயற்படுவாரா என்பதை நாங்கள் பொறுத்திருந்து பார்ப்போம். அத்துடன் இந்த தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி 14 உறுப்பினர்கள் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாக்களித்துள்ளனர். இந்த வெற்றியை நாங்கள்ஏற்கனவே எதிர்பார்த்தோம் என்றார். (ம-7)

# கங்காராமை விகாரையில் ரணில் விசேட வழிபாடு



இலங்கையின் 8ஆவது புதிய ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க தெரிவு செய்யப்பட்ட நிலையில் கங்காராமை விகாரைக்கு சென்று விசேட வழிபாடுகளில் ஈடுபட்டார்.

இலங்கையின் 8ஆவது புதிய ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க நேற்று பாராளுமன்ற உறுப்பினர்களின் வாக்குகளினால் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவிற்கு 134 வாக்குகளும், டலஸ் அழகப்பெருமவிற்கு 82 வாக்குகளும், தேசிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிட்ட அநுரகுமார திஸாநாயக்கவிற்கு 3 வாக்குகளும் கிடைத்திருந்தன. (ம-7)


## மணமகள் தேவை

பிறப்பு - 1982 இந்து
நட்சத்திரம் - உத்தரட்டாதி 3ம் பாதம்
கிரக பாவம் - 11 1/2
செவ்வாய் - 12
தகைமை / தொழில் - சுயதொழில்
எதிர்பார்ப்பு - நற்குணமுள்ள அழகிய பெண்
(12178)
தொடர்பு இலக்கம்
077 388 1756

10வருட வெற்றிகரமான சேவையில். SEP/2022
UK அல்லது கனடாவில் உயர்கல்வி
குறைந்த கட்டணத்தில் இலகுவாக செல்லக்கூடிய நேர்வழி
எமது வீசா ஆலோசனை வாயிலாக UK, கனடா சென்ற மாணவர்களினை நேரில் வரும் சந்தர்ப்பத்தில் பார்வையிட முடியும்
நேரில்வந்து சந்தித்து இலவச ஆலோசனைகளை அறிந்து கொண்டு பயன்பெற...
(12198)
WORLD EDUCATION CONSULTANCY
அலுவலகம்: புதிய உயர் தல்புரி வளாகம் ஆரியகுளம் யாழ்ப்பாணம்
கிளை: சங்கத்தானை சாவகச்சேரி.
0779265447 / 0217200989

பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு
A/L எடுத்தவர்கள் மட்டும் - 6 மாத பயிற்சி

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
(C-4608)
எமது கிளைகள்
● பயிற்சிக்கால ஊக்கத்தொகை -20,000/-
● பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
● பயிற்சியின் முடிவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.
● வேலையின்போது ஆரம்ப சம்பளம் -25,000/-
49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம். 0777-068-777

உடனடி வேலை வாய்ப்புக்கள்
EXECUTIVE OFFICER

✔ சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/=
(நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
✔ வயது-22 தொடக்கம் 35
✔ தகுதி- பட்டதாரிகள்
(ஆங்கில அறிவு அவசியமானது)
(C-4608)
V2 TRAVELS
AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER
போன்ற துறைகளில் பயிற்சி அளித்து உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்
49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம் 0777-068-777


# மரண அறிவித்தல்



## திருமதி கனகசபாபதி லலிதாபூசணி

திருநெல்வேலி கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகசபாபதி லலிதாபூசணி அவர்கள் நேற்று (20.07.2022) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மயில்வாகனம் - மனோன்மணி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற தம்பு - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் கனகசாபாபதி அவர்களின் அன்பு மனைவியும் செல்வநாயகம், சந்திரமலர் (இந்தியா), இராசநாயகம், அருள்நாயகம் (சுவிஸ்), சுசீலா, சறோஜா (சுவிஸ்), அமரநாயகம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் சுபலட்சுமி, வரலட்சுமி, மாதவன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர் - வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை), தனலட்சுமி (ஜேர்மன்), வரனிதி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் விவேகானந்தன், பகீரதன், நந்தினி (ஆசிரியை - யாழ்/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி), யோகலிங்கம் (ஜேர்மன்), சந்திரகுமார் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் கிரியா, துஷாரா, நிரோஷா, அனந்தசாயி, கீர்த்திகா, மதுசாயினி, ரிதுசிகன், அன்யா, ஆரயன், ஆரயா, ஜனுஷ், ஜஸ்னா ஆகியோரின் அன்பப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (21.07.2022) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக .செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். (C-4634)

புதிய செங்குந்த வீதி,
திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.

தகவல் :-
குடும்பத்தினர்


# பதவி வெற்றிடம்

யாழ்ப்பாணத்தில் இயங்கும் நிறுவனமொன்றுக்கு பின்வரும் உத்தியோகத்தர் தேவை.

❖ பொதுசனத் தொடர்பு உத்தியோகத்தர் (பெண்கள்)
சிங்களத்தில் சரளமாக பேசக் கூடியவர்களுக்கு முன்னுரிமை

யாழ். நகரத்திலிருந்து 6 கிலோமீற்றர் தூரத்திற்குள் இருப்பவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

076 097 3121

# காணி விற்பனைக்கு

யாழ். நாவற்குழி சந்தியில் 81 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

❖ A9 பிரதான வீதி முகப்புடனும் மற்றும் 20 அடி பாதையுடன் பின் பக்கமாகவும்.
❖ நாவற்குழி சந்தியில் இருந்து 500m தூரத்தில்.
❖ மூன்று பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
❖ A9 வீதியில் இருந்து 200m தூரத்தில் 20 அடி பாதையுடன் அமைந்துள்ள காணி ஒரு பரப்பின் விலை நான்கு இலட்சம் (400,000/=) மட்டும்.
❖ இயற்கை சூழலுடன் வியாபார நிலையங்கள், களஞ்சியசாலைகள், மண்டபங்கள், வீடுகள் அமைப்பதற்கு உகந்த சூழல்.

❖ பார்வையிடும் நேரம் : காலை 8.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை

(12199)

076 490 5403, 076 491 2493, 076 490 6029


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.07.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.